தென்மொழி

உள்ளே...

அறிவியல் அறிஞரைப் பெருமைப் படுத்துக!

தமிழ்க்களம் வழி மூச்சுயிர்ப்போம்!

நேர்த்தியும் சீர்த்தியும்

பாரதிதாசன் விருதுக்கு மீண்டும் அவமானம்

வடமொழி எழுத்துகள்

கரும்புள்ளி

ஐயாவுக்கு ஓர் அஞ்சல்

மற்றும் பிற...

ஏதிலியரைக் காத்தல் அரசின் கடன்!

எப்புறத்தும் மாற்றினத்தார்
எய்யுங் கொடுமைகளில்
தப்பிவரு கின்றார்
தமிழ்மக்கள் - செப்புங்கால்
ஏதிலியர் வாழ்தற்(கு)
இயலும் உதவிசெயல்
திதிலா ஆட்சித் திறம்!

மாற்றார் கொடுமை
துரத்த மனமொடிந்(து)
ஏற்பாரை நாடுகின்றார்
ஈழத்தார் - சாற்றுங்கால்
நந்தமிழர் வாழ
நலஞ்செய்தல் அன்றோ நம்
சொந்த அரசின் திறம்!

கொல்லும் பகைவர்
கொடுமை பொறுத்தற்கு
வல்லமை யற்றே
வருகின்றார் - சொல்லுங்கால்
நம்மினத்தைக் காத்து
நலஞ்செய்தல் ஏற்றாளும்
செம்மை அரசின் திறம்!

- இறை

தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்

சுவடி - 28
ஓலை - 9
விலை உரு. 4.00

தி.பி. 2027 : கன்னி 1996 செபுதம்பர்

அடிமை மீட்குவோம்!

பாடலில் உரையினில்
பனித்த சொற்களில்
ஈடறும் நறுந்தமிழ்
எடுத்துக் கூறினோம்!
கூடுவ தில்லை, நம்
தமிழினம்; ஆங்கொரு
பீடுறுங் கொள்கையிற்
பிணைவதும் இல்லையே!

நூற்றுக் கணக்கினில்
மேடைகள் அமைத்தே
ஆற்றிய உரைகளுக்
களவுகள் இல்லையே!
ஏற்றமும் கண்டிலர்
எம்மினத் தமிழர்கள்!
மாற்றமும் ஆங்கவர்
மனத்தினில் இல்லையே!

நாற்பான் ஆண்டுகள்
நயத்தொடும் உளத்தொடும்
நோற்பார் போல் நொடி
நுடங்கலு மின்றியே
ஏற்பார் ஏற்பார் - என்
றெதிர்பார்த் திருந்தோம்!
மேற்பார் வையுமிலை;
மேன்மையும் இல்லையே!

ஆயிரம் ஆண்டுகள்
அடிமையாய் உழன்றவன்;
வாயுரம் இழந்தவன்;
வாய்ப்புகள் துறந்தவன்;
நோயிலை; மூடனாய்
நுடங்கிப் போனவன்!
ஆ! இவ னைத்தான்
அடிமை மீட்குவோம்!

- பாவலரேறு ('தென்மொழி' சுவடி: 26 ஓலை: 1)

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

(நிறுவனம் தி.பி.1990 (1959)

நிறுவனர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தென்மொழி

மொழி—இனம்—நாடு

நம்மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடையமுடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

ஆசிரியர் : தாமரை பெருஞ்சித்திரனார்

சுவடி : 28) தி.பி.உ0உஎ - கன்னி (செபுதம்பர் - '96) (ஓலை - 9

அறிவியல் அறிஞரைப் பெருமைப்படுத்துக !

இராசபாளையத்தை யடுத்த சிற்றூரைச் சேந்த தமிழ்மகனார் ஒருவர் நீர்மத்தங்கம் எனப்படும் கன்னெய்க்குச் சமமான முறிநெய் ஒன்றைக் கண்டுபிடித்துத் தமிழ்நாட்டுக்குப் பெருமை சேர்த்திருக்கின்றார். இருபது ஆண்டுகளுக்கு மேலாக விடாமுயற்சியோடு தாம் மேற்கொண்ட ஆராய்ச்சியில் வெற்றிகண்டிருக்கும் அறிவியலறிஞர் இராமர் தமிழ்மக்கள் அனைவருடைய ஒருமுகமான பாராட்டுக்கும் நல்வாழ்த்துக்கும் உரியர்!

கடந்த ஓராண்டுக் காலத்துக்கு முன்னரே திரு. இராமரின் ஆராய்ச்சி பற்றியும் கண்டுபிடிப்புப் பற்றியும் கிழமை இதழான சூனியர் விகடனில் செய்திக் கட்டுரை வெளியாகியிருந்தது. ஆனால், அரசோ, பல்கலைக் கழகங்களோ, ஆராய்ச்சி நிறுவனங்களோ இதனைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. பிள்ளையார் திருவுருவம் பால் பருகுவதாக இந்தியா முழுதும், ஏன் உலகம் முழுதுமே சிலமணி நேரத்தில் செய்தி (!) பரப்பும் அரும்பணியில் ஆர்வமும் ஈடுபாடுங் கொண்ட தொலைக்காட்சி, வானொலி போலும் செய்திபரப்பு நிறுவனங்களோ,

திரைப்படக்காரர்களை மோப்பம் பிடித்துத் திரிவதில் சலிப்படையாத செய்தித்தாள்களோ இது பற்றி மூச்சும் விடவில்லை. சூனியர் விகடனும் அந்த அளவோடு செய்தியை நிறுத்திக் கொண்டது.

அறிவியல் அறிஞர் இராமர் அவர்கள் தம் கண்டுபிடிப்பை அரசியல் தலைவர்கள், அறிவியல் வல்லுநர்கள், மற்றும் பெருமக்கள் பலர் முன்னிலையில் பலமுறை செய்து காட்டியிருக்கிறார். யாராலும் மறுக்கமுடியாத அளவுக்கு அவர்தம் கண்டுபிடிப்பு மெய்ப்பிக்கப் பட்டிருக்கிறது!

ஆனால், அவருக்கு உதவி செய்யவோ ஊக்கப் படுத்தவோ யாரும் முன்வரவில்லை. விளையாட்டிலும் பொழுதுபோக்கிலும் ஈடுபடுகிற வெற்றுப் பையல்களெல்லாம் எத்துணை உயர்த்தப் படுகின்றனர்! அவர்களுக்கெல்லாம் கோடிக் கணக்கில் கொட்டிக் கொடுக்கின்ற அரசும் செல்வச் செழிப்புடைய நிறுவனங்களும், ஆக்கப் பணிகளில் ஈடுபடும் இத்தகைய இளைஞர்களை ஊக்கப்படுத்திடத் தயங்குவது ஏன்?

ஆ! இம் முயற்சியில் ஈடுபட்டு வெற்றிகண்டவன் தமிழனாக - இல்லாமல் வேறொருவனாக இருந்திருந்தால் அவன் எப்படி யெல்லாமோ விளம்பரப் படுத்தப்பட்டு எவ்வாறெல்லாமோ பாராட்டப் பட்டிருப்பான்! பரிந்துரைகளும் பரிசுகளும் அவனைத் தேடிவந்து குவிந்திருக்கும்!

திறமான அறிவாற்றலாலும் அரிய ஆராய்ச்சிகளாலும் நுட்பமான பொறிகளையும், கருவிகளையும், இன்ன பிறவற்றையும் கண்டுபிடித்து உருவாக்கிய அறிவியலறிஞரும் புதுப்புனைவாளருமான கோவை துரைசாமி (G.D. Naidu) அவர்கள் எவ்வகைப் பாராட்டையும் பெற்றதில்லை. அவர் தம் அரிய படைப்புகள் மக்களைச் சென்றடைய முடியவில்லை. அவை புறக்கணித்துச் சிறுமைப்படுத்தப்பட்டன. மனம் நொந்த அப் பெருமகனார் தம் கண்டுபிடிப்புகளான புதுப்புனைவுப் படைப்புகளைப் பதினான்கு கட்சித் தலைவர்களுக்கு முன்னால், நாற்பது ஆட்களைக் கொண்டு சம்மட்டியால் அடித்து நொறுக்கித் தள்ளினார். இந்திய அரசின் மானமுந்தான் நொறுங்கியது. ஆனாலும் அதன் போக்கு இறுதிவரை மாறவேயில்லை. அத்தகைய நிலை எந்த வடிவிலும் திரு. இராமர் அவர்களுக்கு நேர்ந்துவிடக் கூடாது; நேரவிடக் கூடாது என்பதற்காகவே அதனை ஈண்டு நினைவு கூர்கிறோம்!

திரு. இராமர் அவர்களை அறிவியல் அறிஞர் என்று எழுதக் கூடச் சில பெரிய ஏடுகளுக்கு மனம் வரவில்லை. 1973-இல் தொடங்கி இருபத்திரண்டாண்டுக் காலம் தம் அறிவுத் திறத்தாலும் விடா முயற்சியாலும் ஆய்வு மேற்கொண்டு அதில் வெற்றிகண்டு யாவரும் ஒப்ப மெய்ப்பித்துக் காட்டியிருக்கும் அறிவியலாளர் இராமரைக்

கன்னெய்ச் சிறுவன் (Petrol Boy) என்று எழுதி அவ்வேடுகள் தம் மன இறுக்கத்தை வெளிப்படுத்திக் கொண்டன.

இன்னும் சிலர் தற்செயலாகக் கண்டுபிடித்தார் என்பதனை அழுத்திக் கூறி ஒருவாறு ஆறுதலடைகின்றனர். அறிவுக்குச் சொந்தக்காரர்கள், அறிவுக் கொழுந்துகள், அறிவுச் சீவிகளெல்லாம் இருக்கும் போது தமிழனொருவன் கன்னெய் கண்டுபிடித்திருக்கிறான் என்றால் அவன் அறிவுத்திறத்தை அவ்வளவு எளிதாக ஒப்புக் கொண்டுவிட மனம் வருமா?

மரத்தினின்றும் தற்செயலாக விழுந்த பழமே நியூட்டனின் ஆராய்ச்சிக்கும் உலைப்பானையை மூடியிருந்த தட்டின் தற்செயலான அசைவே எடிசனின் ஆராய்ச்சிக்கும் அடிப்படையாய் அமைந்தன. இவ்வாறே இன்னும் பல. ஏன் பெரும்பாலான அறிவியல் கண்டுபிடிப்பு களுக்கெல்லாம் தற்செயல் நிகழ்ச்சிகளே அடிப்படையாய் இருந்திருக்கின்றன; அறிஞர்களுக்குத் தூண்டுகோலாய் அமைந்திருக்கின்றன என்பதை அறிதல் வேண்டும்.

அறிஞர் இராமர் கடந்த ஆண்டு செயலலிதா அரசை அணுகி அமைச்சர்கள் முன்னிலையில் தம் கண்டுபிடிப்பை மெய்ப்பித்துக் காட்டியபோது அவரைப் பாராட்டிப் பரிசளித்துத் தக்கன செய்தற்கு மாறாக அவரிடம் வருவாயில் பங்கு - கையூட்டு வேண்டியிருக் கின்றனர். இது எத்துணை இழிவு!

நடுவணரசோ அறிவியல் தொழில்நுட்ப வல்லுநர்களின் பரிந்துரைப்படி சிறு அளவில் முறிநெய் உருவாக்க ஒப்புதலளித்து மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கடிதம் கொடுத்ததோடு முடித்துக் கொண்டது.

இற்றைத் தமிழக அரசு அறிஞர் இராமரது கண்டுபிடிப்பை ஒப்புக்கொண்டு, அவர் விரும்பியாங்கு அவரது சொந்த ஊர்ப்பக்கத்திலேயே ஆய்வுக் கூடமும், ஆலையும் அமைத்துக் கொடுக்க உறுதியளித்திருப்பது - முதல்வர் கலைஞர் அவர்கள் தம் மன மகிழ்ச்சியையும் ஏற்பையும் உடனே புலப்படுத்தும் முறையில் மதிப்பார்ந்த தம் தூவலை உடனடியாகப் பரிசளித்துப் பாராட்டியிருப்பது பெரிதும் நன்று!

அறிவியல் வல்லுநரான தமிழ் மகனார் இராமர் நன்கு பெருமைப் படுத்தப்பட வேண்டும். அவர்தம் ஆராய்ச்சியும் கண்டுபிடிப்பும் தமிழ்நாட்டை தலை நிமிரச் செய்வன என்பது ஒருதலை. அவருக்குக் கண்டுபிடிப்புரிமையை இந்திய அரசிடமிருந்து மட்டுமன்றி உலக அளவிலும் பெற்றுத் தருவதோடு அவர் நோபெல் பரிசு பெறத்தக்க அளவுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் முயற்சிகளையும் தமிழ்நாட்டரசு மேற்கொள்ளுமாறு வேண்டுகிறோம். - இறை

'தமிழ்க்களம் ' வழி மூச்சுயிர்ப்போம்!

நம் அரும் பெறல் ஆசான் ஐயா பாவலரேறு அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து ஒன்றரை ஆண்டுகள் ஆகின்றன.

ஐயா அவர்களின் சூறைக்காற்றுச் செயல்பாடுகள் அமைவுற்று இருப்பது குறித்து எண்ணுகிற நாமும் அமைந்திருப்பது நல்லதன்று.

இனம், மொழி ஆர்ப்படங்காமல் எழுந்த அவ்வல்லரிமாவின் செயல் வழி தொடர்வதே நம் அடிப்படைப் பணியாதல் வேண்டும்.

அப் பணிக்கான ஊக்கக் களமாகவே நாம் 'தமிழ்க்கள' அமைப்பு முயற்சியை மேற்கொண்டுள்ளோம்.

ஐயா அவர்களின் அமைவிடம் - ஐயா அவர்களை நினைவு கூர்கிற இடம் மட்டுமன்று, ஐயா அவர்களின் செயல்களையும் நினைவு கூர்ந்து தொடர்கிற வினைக் களமாகும்.

ஐயா அவர்களைக் காட்சிப்படுத்துவதற்காகவோ, எண்ணிப் புகழ்பாடுவதற்கான இடமாகவோ 'தமிழ்க்கள' - அமைப்பு எண்ணப்படவில்லை.

ஐயா அவர்களின் அரும்பெறல் அறிவை, வெளிப்பாடுகளைப் பரப்புகிற நடுவமாக, அவ்வினை முயற்சியில் நடுக்களமாகவே தமிழ்க்களம் அமைக்கப்பெற இருக்கிறது.

'தமிழ்க்களம்' - ஒரு தனி அமைப்பன்று. அது ஒரு வினை முயற்சி. 'தமிழ்க்களம்' ஒரு தனி உடைமையும் அன்று. அது 'தமிழர்' அனைவர்க்குமான **'பொது நிலம்'**.

- என்கிற முயற்சியிலேயே 'தமிழ்க்கள' - அமைப்புப் பணி மேற் கொள்ளப் பெற்றுள்ளது.

நம் அரும் பெறல் ஆசான் அவர்களின் செயல்பாடுகளுக்கு எந்த அளவு இத் தமிழ்ப்பேரினம் துணை நின்றுவிட வில்லையோ - அதே நிலைதான் ஐயா அவர்களின் 'தமிழ்க்கள' முயற்சிக்கும் தொடர்கிறது.

ஓர் அரிய நூலகம், தமிழ் மொழியியல், வாழ்வியல், பண்பியல், வரலாற்றியல் ஆய்வுக்கான கூடம், ஓர் அரங்கம் இவற்றோடு - ஐயா அவர்களின் காட்சியகம் என்பதாகத் திட்டமிடப் பெற்ற ஓர் எளிய 'தமிழ்க்கள' அமைப்பு முயற்சிக்குக் கூட இத் தமிழ்மக்களிடம் வலிய உழைக்க வேண்டியுள்ளது, எடுத்துக் கூறி விளக்க வேண்டியுள்ளது.

'தமிழ்க்கள' - அமைப்புக்கெனத் திட்டமிடப்பெற்ற செலவுத் தொகையில் ஓரிரு விழுக்காடே இதுவரை திரட்டப்பட்டிருக்கிறது. அதற்கான அமைப்பு முயற்சியைத் தம் முழுப்பணியாக ஏற்றுக்கொண்டு செயல்படும் தமிழ் அன்புள்ளங்கள் குறைவாகவே உள்ளன.

'தமிழ்க்கள' அமைப்பை முழுமையாய்த் தாங்களே பொறுப்பேற்று அமைத்துத் தருகிறோம் - என்று பாட்டாளி மக்கள் கட்சியினர் சொன்னபோதும் அவ்வாறன்றி தமிழர் அனைவரின் உழைப்பிலும் பங்களிப்பிலுமே அக் 'களம்' - அமைதல் வேண்டுமென உறுதிப் படுத்திக் கொண்டோம்.

பாவலரேறு - ஐயா அவர்கள் தம் வாழ்நாளின் செயல்பாட்டுப் பாதையே - நம் தொடர்ந்த வினைக்கான பாதை - என்கிற வகையில் எந்த ஒரு தனி நிலையையும் சார்ந்து தம்மை இழந்து போகாமல் 'தமிழ்க்களம்' செம்மாந்து நிற்பதே சரியென நாம் எண்ணுகிறோம்.

எனவே தான், தமிழர் அனைவரின் உழைப்பையும் நோக்கி நாம் கை நீட்டுகிறோம்.

'தமிழ்க்களம்' - நோக்கி அழைக்கிறோம்.

'அரசியலில் சில வகையில் உடன்பாடு இல்லாமல் போனாலும் ஐயா அவர்களின் மீது எங்களுக்குத் தனி மதிப்பு உண்டு' என்றும், 'இத் தமிழ்க்களத்திற்குத் துணை செய்வோம்' - என்றும் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் முன்பு கூறிய வகையில் அவர்களையும், தமிழ் மக்களின் உரிமை வாழ்க்கையில் அக்கறை கொண்ட அனைத்து அமைப்பினரையும் நேரில் கண்டே 'தமிழ்க்கள' - வினை முயற்சிக்குத் தோள் கொடுக்கக் கேட்டுள்ளோம்.

இப்படியான முயற்சியின் பாதையில் 'தமிழ்' என்பதே 'வன்முறை' - என்று பொருள் கொண்டோ என்னவோ, அரசின் உளவுத் துறை 'தமிழ்க்களம்' பற்றி உசாவலையும் தொடர்ந்திருக்கிறது.

அரசின் அறிதலுக்கு உட்பட்டோ, உட்படாமலோ காவல்துறை 'தமிழ்க்கள' அமைப்புப் பற்றித் தம் 'உளவு' வேலையைத் தொடர்கிறது.

நம் அரசமைப்பில் அறிஞர்கள் பேணப்படுவதுமில்லை; அவர்களின் அறிவு புரக்கப்படுவதுமில்லை.

அறிஞர்கள் வாழ்நாளில் மட்டும் அல்லாமல் அவர்கள்தம் மறைவுக்குப் பின்பும் தொல்லை கொடுக்கப்பெறுவதன் வழி அறிவை எந்த அளவு அரசு மதிக்கத்தவறுகிறது - என்பதை விளங்கிக் கொள்ள முடியும்.

'தமிழ்க்கள' அமைப்பு இத் தமிழக மக்களின் அறிவூட்டத்திற்கான

ஓர் இரை (உணவுக்களம்) அது நாற்றங்கால்களைப் பயிரிடுகிற ஓர் அறிவுக்களம். அறிவு முயற்சிக்கு ஒரு வினைத்தளம்.

- என்பதே அதன் அமைப்பு முயற்சியின் நோக்கமாகும்.

இராமக்கிருட்டிணரின் கருத்துகளைப் பரப்புகிற செயல்பாட்டுத் தன்மை தமிழ்க்களத்திற்கு உண்டே அல்லாமல் அதுபோன்றதான ஒரு 'மடப்' பள்ளி அன்று தமிழ்க்களம்.

'அன்பிற்கு மழைநீராய்,

அறிவுக்குப் பெருநெருப்பாய்

ஆற்றலுக்கு சூறைக்காற்றாய்' - இயங்கிய நம் பாவலரேறு ஐயா அவர்களின் அறிவுச் சுரப்பைப் பரப்பும் முயற்சிக்கான நடுவமே அது.

அந் நடுவ முயற்சிக்குத் தமிழர் நாம் அனைவரும் துணை நிற்க வேண்டியே அழைக்கிறோம். துணை நிற்போம் - தூணாவோம்!

விழுதுகளாய் ஊன்றி, பாவலரேறு தமிழ்க்களத்தின் வழி மூச்சாய் உயிர்ப்போம்!

- பாவலரேறு தமிழ்க்கள அமைப்புக் குழு

அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

இன்றைய நிலையில் 'தென்மொழி' இதழ் விற்பனைக் கணக்கிலும், தென்மொழி நாள்காட்டி, நூல்கள், மலர்க் கணக்கு நிலைகளிலும் தென்மொழி அன்பர்களும் முகவர்களாக இருப்பவர்களும் பெருமளவில் பட்டியல் தொகைகளை நிலுவையாக வைத்திருக்கிறார்கள். அவ்வன்பர்களுக்குப் பலமுறை நினைவூட்டு மடல்கள் விடுத்தும் அமைவாகவே இருக்கின்றார்கள். தென்மொழியின் தொடர்ச்சியான வெளியீடு, நூறாசிரியம் வெளியீடு, ஐயா அவர்களின் நினைவு மலர் வெளியீடு ஆகிய தவிர்க்க இயலாத இவற்றால் மிகவும் பொருளியல் சிக்கலாக இருக்கும் இந்நிலையில் தொகை விடுத்து வைத்தால் மிகவும் பயனுடையதாக இருக்கும் என்பதைத் தென்மொழி அன்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம். ஆதலின், அன்பர்கள் நிலுவைத் தொகைகளை விடுத்துவைத்து அடுத்து வருகின்ற முயற்சிகளுக்குப் பெரிதும் துணை நிற்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

– அமைச்சர், தென்மொழி

நேர்த்தியும் சீர்த்தியும்

- திருக்குறள்மணி

மக்கள் தாம் துய்க்கின்ற பொருள்கள் எவற்றையும் கைக்குக் கிட்டியவை போதும் என்றோ எளிமையாய் இருந்தால் தாழ்வில்லை என்றோ எண்ணி மனநிறைவடைவதில்லை. உண்பனவும் உடுத்துவனவும் மட்டுமன்றிப் பயன்படுத்துங் கருவிகள் பல்வகைக் கலைகள், பார்த்து மகிழுங் காட்சிகள் உள்ளிட்ட எல்லாமே நேர்த்தியாகவும் சீர்த்தியாகவும் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். எவ்வாறேனும் அடிப்படைத் தேவைகள் நிறைவேறினால் போதும் என்னும் நிலையில் நின்றுவிடாமல் ஒவ்வொன்றிலும் சிறந்ததனைத் தெரிந்தெடுத்துப் பயன்கொள்ள அவாவுகிறது மக்கள் நெஞ்சம்!

இயற்கை விளைச்சலான இனிய பழங்களில்கூட முதன்மை வாய்ந்தவை என்று முக்கனிகள் பேசப்படுகின்றன. மா, பலா, வாழை என்னும் அக் கனிகளிலும் சுவையான பாகுபாடுகள் உண்டு.

மாம்பழத்தில் 'சேலம் பழந்தான் சிறந்தது; அதிலும் நடுச்சாலைப் பழத்தின் நறுஞ்சுவைக்கு ஈடில்லை' என்றால், இன்னொரு பக்கம் 'நீலம் மாம்பழத்திற்கு நிகரில்லை; பங்கனப்பள்ளிப் பழம் பெயர் போனது; அதன் சுவையே தனி' என்கிறார்கள். மற்றொரு பக்கம் இராசபாளையம் சப்பட்டைப் பழமும் போட்டிக்கு வருகிறது!

பலாவுக்குப் பண்ணுருட்டி சிறந்ததென்றால், பலாவுக்கு மட்டுமன்று, தேனுக்குஞ் சேர்த்துக் கொல்லிமலை உயர்ந்து விளங்குகின்றது.

வாழை வளத்தில் ஆடுதுறைக்கு அடுத்தபடிதான் மற்றவை யெல்லாம் என்றாலும் முசிறிதான் வாழைக்கு முதல்தரமான இடம் என்கின்றனர். அங்கெல்லாம் வாழை செழிப்பாக இருக்கலாம். ஆனால், மலைவாழைக்கே மதிப்பு மிகுதி. அதிலும் சிறுமலைப் பழத்தின் சுவையே சுவை! கேரளத்தின் செழிப்பு நேந்திரம் பழத்திலும்!

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் நாகை, ஆரூர் பகுதிகளையும் உள்ளடக்கிய நன்செய் வளமிக்க தஞ்சை மாவட்டந்தான் என்றாலும் அரிசி என்றால் ஆர்க்காடும், ஆந்திரத்து நெல்லூருந்தான் நினைவுக்கு வருகின்றன.

கோட்டாற்றுத் தேங்காயும் சாத்தூர் மிளகாயும் புகழ் பெற்றவை. பெல்லாரி என்பது பெரிய வெங்காயத்தின் மறுபெயராகிவிட்டது. பெருவுடையார் கோயில் நந்தியை மறந்தாலும் தஞ்சாவூர் முந்திரிப்பருப்பை மறக்கமுடியாது. வெண்ணெய்க்கும் நெய்க்கும் வேறுபாடு சிறிதுதான் என்றாலும் வெண்ணெயில் விஞ்சியது கோவை - ஊத்துக்குளி; நெய்மணஞ் சிறந்தது சேலம் - இராசிபுரம்!

திருமலைக்குச் செல்கிறவர்கள் பெருமாளை வழிபடுகிறார்களோ இல்லையோ பூந்தியுருண்டையை வாங்கிவர மறப்பதில்லை. 'பழனிக்குப் போய்வந்தோம்' என்றால் 'ஐந்தமிழ்தம் வாங்கிவந்தீர்களா?' என்று வினவுகிறார்கள். காஞ்சிபுரம் இட்டளியும், அழகர் கோயில் தோசையும் மறக்கமுடியாதவை. மணப்பாறை நெய்முறுக்கு, ஆட்டையாம்பட்டிக் கைமுறுக்கு, பேரளம் வடை, கொள்ளிடம் சுண்டல், திருவில்லிபுத்தூர்ப் பாற்கட்டி, நாகப்பட்டினம் இனிப்பு வகை முதலியவை செல்வாரை யெல்லாம் வரவேற்பன. திருநெல்வேலித் தேங்கூழ் (அல்வா) பெரும் பெயர் பெற்று விளங்குவது. மும்பைக்கும் அத்தகைய சிறப்புண்டு!

குடந்தை வெற்றிலையின் குழைவை வேறூர் வெற்றிலையில் பெற முடியாது. அவ்வாறே பாண்டமங்கலம் வெற்றிலை போட்டுப் பழகியவர்கட்கு மற்றவையெல்லாம் வெற்று இலைகளாகவே இருக்கும். கொள்ளிடம் வெட்டிவேரும், தஞ்சைச் சிறப்புக் கலம்பமும், மதுரை மல்லிகையும், மைசூர் சந்தனமும் செல்லுமிடமெல்லாம் மணங்கமழ்பவை.

பட்டு என்றால் காஞ்சிப்பட்டு, கர்சிப்பட்டு, ஆரணி, தருமாவரம், கொள்ளேகாலம், மைசூர், மும்பை என்று பலவாறாகச் சொல்லப்பட்டு, அவை நாடப்பட்டு, தேடப்பட்டு, உயர்ந்த விலையானாலும் வாங்கி உடுத்தப்பட்டு வருவதை அறியாதவர்கள் இருக்க முடியாது. சின்னாளம்பட்டி, கூறைநாடு, உறையூர், கோடம்பாக்கம் என்பன சேலைக்கும், வடசேரியும் நெகமமும் வேட்டிக்கும் பெயர்பெற்று விளங்குகின்றன. சேலம் கண்டங்கி வேட்டி தனிச்சிறப்பு வாய்ந்தது. பவானி விரிப்பும், கரூர் போர்வையும் போல் திருப்பூர் உள்ளொட்டிகள் (பனியன்) வெளிநாடுகளிலும் விரும்பப்படுகின்றன.

கோரைப் பாய்களே யாயினும் பட்டுப் பாய்களுக்குச் சீர்காழியும் பத்தமடையும் சிறப்புப் பெற்றவை.

திருவேரகம் (சாமிமலை) ஐம்பொன் சிலைகளும், நாச்சியார் கோயில் குத்துவிளக்கு முதலிய நல்ல விளக்குகளும் சிறந்தவை.

குடந்தை வெண்கல ஏனங்கள் போலவே இன்று நிலைவெள்ளி (Ever Silver) ஏனங்களும் தலை சிறந்து விளங்குகின்றன.

திருப்பாச்சேத்தி வீச்சரிவாளும், தம்பிக் கோட்டை வெட்டரிவாளும் அறைகூவல் விடுபவை. திண்டுக்கல் பூட்டு திறமானது. தீவாமங்கலம் மரக்கால் த்ரமானது. ஆலங்குடி பாக்குவெட்டி அழகிய வேலைப்பாடுடையது.

கலைநலஞ் சிறந்த சிற்ப வேலைப்பாடுகளுக்குக் கடாரங் கொண்டான் மதிலும் ஆவுடையார் கோயில் கொடுங்கையும், திருவீழிமிழலை வெளவால் நத்தி மண்டபமும் எடுத்துக் காட்டுகளாகச் சுட்டப்படுபவை. நெடிதுயர்ந்த திருவில்லிப்புத்தூர் கோபுரம் போல் நீண்டகன்று கிடப்பது இராமேசுவரம் திருச்சுற்று. 'திருவாரூர்த் தேரழகு; திருவிடைமருதூர்த் தெருவழகு; திருவிரிஞ்சை மதிலழகு; திருமறைக்காட்டு விளக்கழகு!'

காங்கேயத்துக் காளை பெருமிதம் வாய்ந்தது. இராசபாளையத்து நாய்க்கும் சிறப்பு உண்டு.

குற்றாலத்து அருவியும், குன்னூர் மலைத்தோட்டங்களும், கோடைக்கானல் மலைநகரமும், சென்னைக் கடற்கரையும் சிறப்புப் பெற்றன.

இவ்வாறெல்லாம் வேறுபடு பொருள்களின் கூறுபாடு கண்டு சிறந்தவற்றுள் சாலச் சிறந்தவற்றைத் தேர்ந்து பயன்கொள்ளும் தமிழன், அறிவு வளர்ச்சிக்கும் நாகரிக மேம்பாட்டுக்கும் அடிப்படையானது மொழி என்பதை உணராமல், உயர்தனிச் செம்மொழியாகிய தமிழையே தாய்மொழியாகப் பெற்றிருந்தும், அதனை ஆழ்ந்து பயில்வதிலும் ஆய்ந்து தெளிவதிலும் அக்கறையில்லாமல், மேன்மேலும் வளர்த்து வளப்படுத்துவதில் முனைப்புக் கொள்ளாமல் இருக்கிறான் என்றால் அது இயற்கையோடு இயைந்த உணர்வாக இருக்க முடியாது. எந்தச் சொற்களைப் பேசினால் என்ன? எப்படி எழுதினால் என்ன? எதிற் பாடினால் என்ன? வழிபாடும் வாழ்வியற் சடங்குகளும் எந்த மொழியில் நடந்தால் என்ன? ஆட்சித் துறைகளிலும் அறமன்றத்திலும் எந்த மொழி இடம் பெற்றால் என்ன? கையெழுத்தைத் தமிழில் போட்டுவிட்டால் எல்லாம் சரியாகிவிடுமா? பெயரில் என்ன இருக்கிறது? என்றெல்லாம் முரண்பாடாக வினவுகிறான்; முணுமுணுக்கிறான் என்றால் அடிப்படையிலேயே அவன் அறிவில் தெளிவற்றவனாகவும் உணர்வில் திரிபுற்றவனாகவும் ஆகியிருக்கிறான். ஆக்கப்பட்டிருக்கிறான் என்றே கொள்ள வேண்டும்!

ஐயாவுக்கு ஓர் அஞ்சல்!

போற்றுதலுக்குரிய, எங்கள் ஆருயிர் ஐயா, வணக்கம்!

தாங்கள் அறிவாகவும், அன்பாகவும், அருந்தமிழ் வல்லுநராகவும்; 'தென்மொழி, 'தமிழ்ச்சிட்டு', 'தமிழ்நிலம்' ஆசிரியராகவும், அஞ்சா நெஞ்சங் கொண்ட விடுதலை மறவராகவும், அடக்குமுறை ('தடா', 'மிசா')ச் சட்டங்கள் தளைப்படுத்தினாலும் சிறைக் கஞ்சாச் செம்மலாகவும் போற்றப்பட்டு நினைவை எம்மிடையே வைத்துவிட்டு நலமாக இருக்கின்றீர்கள். ஆனால் நாங்கள் நலமில்லை! எண்ணினாலும் ஏக்கம்; எழுதினாலும் ஏக்கம்; செயற்படத் தொடங்கினாலும் ஏக்கம்! எல்லா நிலையிலும் ஐயா சொல்லட்டும் என்றிருப்போம். 'இனி, யார் சொல்வார்...?' என்ற ஏக்கப் பெருமூச்சால் நலங்குன்றி விட்டோம்!

அன்று ('95சூன்11ஆம் நாள்) காலை 9 மணியளவில் இராமச்சந்திரா மருத்துவமனை வளாகத்தில் எங்களை உங்களிடமிருந்து பிரிக்கிறார்கள், உடலிலிருந்து உயிரைப் பிரிப்பது போல்! உங்கள் மனத்தில் இடம்பெற்ற மருத்துவர் மல்லிகேசன் அவர்கள் கூறுவது என் காதில் விழுகிறது. 'எல்லோரையும் அழைத்துப் போங்கள்! அமெரிக்காவிலிருந்து ஐயாவின் மகள், மருமகனார், குழந்தைகள் வரும்வரை ஐயாவை நாங்கள் குளிரறையில் பாதுகாப்பாக வைத்திருப்போம். நீங்கள் ஓரிருவர் இருந்தால் போதும்' என்று அவர் அழுகுரலில் கூறியது உங்களுக்குத் தெரிந்திருக்கும் என்றாலும் தெரியாது என்று கருதியே எழுதுகிறேன்.

எல்லோரும் வந்தார்கள். அவர்களை யெல்லாங் கண்டவுடன் தொண்டையை அடைக்கின்ற அழுகை எதற்கு என்று தெரியவில்லை. திரு. ஈழவேந்தன் துணைவியார் அணைத்துக் கொள்கிறார்கள். தலைநகர்த் தமிழ்க் கழகத்தினர், தமிழ்ச் சான்றோர் பேரவையினர், உயிர் நண்பர் பன்னீர் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் துன்பத்தால் தேம்புகின்றனர். அருளாளர் அருள்மணி 'ஐயா...!' என்று அலறியதைக் கேட்டீர்களா? எல்லோரையும் அழவைத்துவிட்டுப் பெருமையோடு நிற்கிறது ஐயா இந்த உலகம். வியப்பினும் வியப்பு!

கணவராக மட்டுமில்லை; தந்தையாராக, மாமனாராக, தாத்தாவாக மட்டுமில்லை- இடித்து இடித்துக் கூறி உண்மை, நேர்மை, விடாமுயற்சிகளை வலியுறுத்தி வளர்த்த பேருயிரான உங்களை இழந்த நாங்கள் எப்படி ஆறுதல் பெற முடியும்? மறதி, மனவமைதி எவ்வாறு வரும்? கூடிக்கூடிப் பேசி நெஞ்சங் குமுறி நிலைகுலைந்து போகிறோம்!

மருத்துவமனையிலிருந்து சிலரை மகிழுந்தில் ஏற்றித் தீப்பற்றி யெரியும் நெஞ்சோடு தியாகராயர் நகருக்கு அழைத்துச் சென்றார்கள்... பாவலரேறு பெருஞ்சித்திரனார் தெரு வெறுச்சோடிக் கிடக்கிறது. ஐயாவின் வீடு அழுது கொண்டிருக்கிறது. ஐயா, உங்கள் அறையில் நீங்கள் அமரும் நாற்காலியைக் காற்று அசைக்கிறது. நீங்கள் இருக்கிறீர்கள்; உங்களுக்கு இறப்பில்லை; என்றென்றும் வாழ்வீர்கள் என்று, வெதும்புகின்ற எங்கள் நெஞ்சம் சூளுரைக்கிறது! ஐயா, உங்களின் அன்பர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். நாங்கள் எப்படி அழுவோம்!

'ஐயாவைப் பார்க்கவா வருகிறீர்கள்...?'

அழுகை ஒலி...!

- **தாமரை பெருஞ்சித்திரனார்**

மக்களவை

திரித்துப் பேசாதீர்!

அன்புள்ள ஐயா, வணக்கம்!

பாவலரேறு ஐயா காலத்தில் அவரோடு ஓரளவு பழகியவரும், அவர்மேல் இன்றும் மதிப்பு வைத்திருப்பவரான நண்பர் ஒருவர் சில திங்களுக்கு முன் சென்னைப் பொதுக் கூட்டமொன்றில் ஐயாவின் கொள்கைகளைப் பற்றிச் சற்றே திரித்துப் பேசியிருப்பதை அறிந்து திகைத்துப் போனேன்.

'ஈழத் தமிழர் விடுதலைக்காகவும், தமிழகத் தமிழர் உரிமைக்காகவும் தொடர்ந்து உறுதியாகக் குரல் கொடுத்தவர்' என்று பாவலரேறு பற்றிப் பேசியிருக்கிறார். இப் பேச்சு ஐயாவின் கொள்கையைத் திரித்துப் பேசுவதாகும். 'ஈழத் தமிழர் விடுதலைக்காகவும், தமிழகத் தமிழர் உரிமைக்காகவும்' என்று சொல்லுவதன் மூலம் 'தமிழ் ஈழ விடுதலை தேவை; தமிழ் ஈழம் விடுதலை பெற வேண்டும். ஆனால் தமிழ் நாட்டு விடுதலை தேவையில்லை, தமிழ்நாடு விடுதலை பெற வேண்டியதில்லை' என்பதே ஐயாவின் கொள்கை என்பது போலப் பொருள்படப் பேசியிருக்கிறார். இது தவறான கருத்து என்பதை ஐயாவைத் தெரிந்தவர்களும், தென்மொழியைப் படித்தவர்களும் அறிவர்.

'தமிழ் நாட்டு விடுதலை தேவை' என்ற கொள்கையை ஐயா தொடக்க நாட்களிலிருந்து, இறுதி நாட்கள் வரையிலும் கொண்டிருந்தார். அந்தக் கொள்கையை அவர் எந்த நிலையிலும் விட்டுக் கொடுக்கவில்லை.

சென்னைப் பொதுக் கூட்டத்தில் பேசிய நண்பர் பாவலரேற்றின் தமிழ்நாட்டு விடுதலைக் கொள்கையை ஏற்றுக் கொள்ளாமலிருக்கலாம். அந்த உரிமை அவருக்குண்டு. அல்லது தமிழ் நாட்டு விடுதலையைப் பற்றிப் பொதுக் கூட்டத்தில் பேச விரும்பாமலிருக்கலாம். அந்த உரிமையும் அவருக்குண்டு. ஆனால் ஐயாவின் தமிழ் நாட்டு விடுதலைக் கொள்கையைத் திரித்துப் பேசும் உரிமை யாருக்கும் கிடையாது. சென்னைப் பொதுக் கூட்டத்தில் பேசிய நண்பர் தெரிந்து பேசினாரோ, தெரியாமல் பேசினாரோ, வேண்டுமென்றே அப்படிப் பேசினாரோ,

வாய்தவறிப் பேசி விட்டாரோ, எதுவாயினும் அவர் கூற்று பிழையானது.

பாவலரேறு காலஞ்சென்று ஓராண்டுக்குள்ளேயே அவரது வாழ்நாள் தொண்டைப் பற்றியும், கொள்கைகளைப் பற்றியும் திரிபான கருத்துகள் பரவத் தொடங்குமானால், இன்னும் பத்தாண்டுகளில் ஐயாவின் வாழ்வும், தொண்டும், கொள்கைகளும் பற்றிய அரைகுறையானவையும், திரிவு பட்டனவுமான கருத்துகளே தமிழ் மக்களிடையே பரவும். எனவே, தென்மொழியன்பர்கள் இதுபோன்ற திரிவான கருத்துகளை யாராவது பேசக் கேட்டால், அப்படிப் பேசுபவருக்கும், பேச்சைக் கேட்பவர்களுக்கும், உடனடியாகத் தவற்றைச் சுட்டிக் காட்ட வேண்டும். ஐயாவின் கொள்கைகள் நேரிய முறையில் (திரிக்கப்படாமல்) தமிழ் மக்களிடையே பரவ வழிவகுப்பதே நாம் அவருக்குச் செய்யும் வீரவணக்கமாகவும், போற்றுதலாகவும் இருக்க முடியும்.

'ஆண்டு நூறானாலும் அன்னைத் தமிழ்நாடு
வேண்டும் விடுதலை எண்ணம் விலக்கோம் யாம்!
பூண்டோம் உறுதி புறப்பட்டோம் என்றேநீ
மூண்ட இடியாய் முழங்காய் தமிழ்மகனே!'

- பாவலரேறு

- ச.செல்லையா
அமெரிக்கா

பேசியது என்ன?

ஐயா, வணக்கம்!

தென்மொழி ஆகத்து - செபுதம்பர் '96 இதழில், நான் பாவலரேறு அவர்களை இழிவுபடுத்திப் பேசினேன் எனக் குற்றம் சாட்டிச் செல்வம் என்பவர் எழுதிய கடிதத்தை வெளியிட்டுள்ளதைக் கண்டேன். அது குறித்த எனது கீழ்வரும் விளக்கத்தைத் தவறாது, வரும் இதழில் வெளியிடுமாறு வேண்டுகின்றேன்.

நான் பேசிய முழுப்பேச்சும் வரும் 'கோடாங்கி' நான்காம் இதழில் வெளிவர உள்ளது. அன்றைய எனது உரையின் நோக்கம் பெருஞ்சித்திரனார் அவர்களைப் பற்றி ஆய்வுரை செய்வதோ அல்லது மதிப்பிடுவதோ அன்று. ஐயா அவர்கள்மீது எங்களுக்கு மிகுந்த நன்மதிப்பு உண்டு. கடந்த நிறப்பிரிகை இதழில் அதனை வெளிப்படுத்தியுள்ளோம்.

அன்று எனது உரையின் நோக்கம் பார்ப்பனியம் போலவே

வெள்ளாளமும் இடரானது எனச் சுட்டுவதே. தமிழியக்கங்களின் வெள்ளாளச் சார்பை எடுத்துக் காட்டிப் பேசி, தமிழை 'வைதிக' நீக்கம் செய்வதென்பது வெறுமனே வடமொழிச் சொற்களையும், எழுத்துகளையும் நீக்குவது மட்டுமன்று, அதற்கும் மேலாகத் தமிழ் மொழிக் கட்டமைப்பிலேயே கலந்து போயுள்ள 'வைதிக'க் கூறுகளை நீக்குவதும், செவ்வியல் நெறிப்படுத்தப்பட்ட தமிழ் தவிர விளிம்புகளிலுள்ள அடித்தட்டு மக்களின் தமிழ்களை உரிய இடங்கொடுத்து ஏற்றுக் கொள்வதுமாகும் எனக் கூறினேன். 'இதற்குரிய கவனத்தை நாம் தராமற் போனால் வெள்ளாளர்களாக இல்லாத போதும் பிறபடுத்தப்பட்ட, இசுலாமிய மற்றும் ஒடுக்கப்பட்ட சாதித் தமிழர்களாகப் பிறந்த திருவாளர்கள் மணியரசன், இன்குலாப், பெருஞ்சித்திரனார் ஆகியோருங்கூட வேளாளர்களின் கோமணங்களாக மாறுவது தவிர்க்க இயலாததாகிவிடும்' என்றேன். பெரியார் இது குறித்து (தமிழை வைதிக நீக்கம் செய்வது) விரிவாகப் பேசியுள்ளார். வெறும் வடமொழிக் கலப்பற்ற தமிழை எழுதுவதும் பேசுவதும் மட்டுமே போதாது என்பதே என் பேச்சின் சாரம்.

'தமிழ்கள்' எனச் சொன்னதும் இந்தப் பின்னணியிலேயே முத்தமிழ்கள் பற்றி நாம் பெருமையாய்ப் பேசி வருகின்றோம். மலைத் தமிழ், கூலித் தமிழ் என்றெல்லாம் புத்தகங்கள் வெளிவந்துள்ளன. அவ்வளவு ஏன் செந்தமிழ், கொடுந்தமிழ் எனச் சொல்வது தொல்காப்பிய மரபு. எனில் 'தமிழ்கள்' என நான் சொன்னமைக்கு ஏன் இத்துணைச் சினங் கொள்ள வேண்டும்?

செல்வம் அவர்களின் கடிதம் கண்ட பிறகு பாவலரேறு அவர்களின் எழுத்துகளை மீண்டும் ஒருமுறை விரிவாகப் பயின்றேன். தனித்தமிழ் இயக்கத்தின் பொதுப் போக்குகளிலிருந்து ஐயா அவர்கள் கீழ்க்கண்ட கூறுகளில் வேறுபட்டு நிற்பதை உணர்கிறேன். அவை:

(அ) தனித் தமிழ் இயக்கத்தை நாட்டு விடுதலையுடன் இணைத்து அதற்காக உண்மையாக இறுதிவரை உழைத்தது.

(ஆ) மறைமலை அடிகளார் தோற்றுவித்த தமிழியக்கத்தின் சிவனியச் சார்பைக் கண்டித்தது.

(இ) இந்து மதத்தைத் தொடர்ந்து எதிர்த்தது. பார்ப்பனியத்தைத் தமிழ்ப் பார்ப்பனியம் என்றெல்லாம் பிரித்து ஆதரிக்காமல் தொடர்ந்து எதிர்த்து வந்தது.

(ஈ) திருவள்ளுவருக்குப் பின் தோன்றிய தமிழினத் தலைவராகப் பெரியார் அவர்களை ஏற்றுப் போற்றியது.

மொழிக் கட்டமைப்பை 'வைதிக' நீக்கம் செய்தல் குறித்துப் பெரியாரளவு பாவலரேறு அவர்கள் செல்லாதபோதும் மேற்குறித்த

வகைகளில் வேளாளத்திலிருந்து அவர் விலகி நின்றது பெரும் போற்றுதலுக்குரியது. ஒட்டுமொத்தமாய் அவரைப் பிறருடன் இணைத்துப் பேச வேண்டியதில்லை என்பதை ஏற்றுக் கொள்கிறேன். பாவலரேறு அவர்களின் தொண்டர்களின் மனம் புண்பட்டிருந்தால் வருத்தம் தெரிவித்துக் கொள்கின்றேன். எனினும் பாவலரேறு அவர்களின் கருத்துகளில் பல ஆய்வுக்குரியவை என்பதையும் வலியுறுத்த விரும்புகிறேன். கருத்தாய்வுரைகள் தேவை என்பதில் கருத்து மாறுபாடில்லை. ஆனால் கருத்தாய்வு என்று தொடங்கி அவதூறில் முடிந்துள்ளது செல்வத்தின் கடிதம். கிருத்துவ நிறுவனங்களிடமிருந்து பணம் பெற்றுக்கொள்வதாக வெளியிட்டுள்ளீர்கள். இதை நீங்கள் நிறுவினால் நான் எனது அரசியல் வாழ்வைத் துறக்கிறேன். நிறுவ இயலாவிட்டால் நீங்கள் வருத்தம் தெரிவிப்பதே நேர்மை. நான் ஏழாயிரம் ஊதியம் பெறுவது குறித்தும் எழுதப்பட்டிருந்தது. அறிஞர் அருளி உட்பட இதைவிட அதிக ஊதியம் பெறுகிறவர்களெல்லாம் உங்கள் இயக்கங்களோடு இருக்கிறார்களே என்ன செய்யப் போகிறீர்கள்?

தங்கள் உண்மையுள்ள
- அ. மார்க்சு

வருந்துகிறோம்!

■ தொடக்கக்காலம் முதல் தென்மொழி அன்பரும், துணையாளரும் உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் பெரியார் மாவட்ட துணைச் செயலருமான ஈரோடு, புலவர். தி.மு.அரசமாணிக்கனார் அவர்களின் துணைவியார் கடந்த கடகம் 21 (5-8-96) அன்று இயற்கையெய்தியமைக்கு மிகவும் வருந்துகிறோம். அவருக்கும், அவரின் குடும்பத்தார்க்கும் தென்மொழி தன் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

■ தென்மொழியின் நெடுநாள் அன்பரான வழக்கறிஞர் அத்தனூர் திரு. கொ. பரமசிவம் அவர்களின் அன்னையார் கடந்த மடங்கல் - 13 (29-8-96) அன்று மறைவுற்றது குறித்து வருந்துவதோடு, அவருக்கும் அவரின் குடும்பத்திற்கும் தென்மொழி தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

- ஆசிரியர்

என்ன வரும் பார்ப்போம்!

திருக்குறளார் முனுசாமி அவர்களால் ஆற்றுப்படுத்தப்பெற்று விழுப்புரம் நிகழ்ச்சி யொன்றில் (1969) பாவலரேறு அவர்களைக் கண்டு தம்மை அறிமுகஞ் செய்து கொண்டார் திருக்குறள் எண்கவனகர் இராமையனார். பாவலரேறு அவர்களின் பரிந்துரைப்படி அற்றை நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக இராமையனாரின் எண்கவனகமும் நடைபெற்றது. அந் நிகழ்ச்சியைக் கண்டு பெரிதும் மகிழ்ந்தும் வியந்தும் பாராட்டினார் பாவலரேறு. அவர்தம் அன்பான அளவளாவலும் சிறப்புச் சொற்பொழிவும் இராமையனாரைப் பெரிதும் இன்புறுத்தின.

பாவலரேறு அவர்களுடைய அழைப்பின்படி இராமையனாரும் அவர் மகன் பாரதிதாசனும் (கனகசுப்புரத்தினம்) தென்மொழி இல்லத்துக்கு வருகை தந்தனர். கடலூர் - திருப்பாதிரிப்புலியூர் வட்டாரத்துப் பல இடங்களில் இராமையனாரின் கவனக நிகழ்ச்சி சிறப்புற நடைபெற்றது.

கனகசுப்புரத்தினம் தம் தந்தையாரிடம், 'என்ன அப்பா, ஐயாவின் வீட்டிலும் அச்சகத்திலும் எல்லோரும் ஐயாவைப் போலவே புது மாதிரியாகப் பேசுகிறார்கள்?' என்று வினவ, இராமையனார் 'அவர்கள் பேசுவதுதானப்பா தமிழ் - நல்ல தமிழ். நாமும் மற்றவர்களும் பேசுவதெல்லாம் கொச்சைத் தமிழ் - நாமும் இனி நல்லதமிழில் பேச முயற்சி செய்ய வேண்டும்!' என்று மறுமொழி கூறினாராம்.

சின்னாட் சென்றபின் தென்மொழிக் குடும்பத்தினரிடம் பிரியாவிடை பெற இராமையனாரும் கனகசுப்புரத்தினமும் தம் ஊரான கோயிற்பட்டிக்குத் திரும்பினர்.

தாம் நலமுற ஊருக்குத் திரும்பியது குறித்தும், தம் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தியும் பாவலரேறு அவர்களுக்குக் கடிதம் எழுதிய இராமையனார் அதில் பிறமொழிச் சொல் கலவாது எழுதுவதில் உன்னிப்பாக இருந்தார். இருப்பினும் தமது முகவரியை எழுதுங்கால் அதிலுள்ள 'மேஜர்' (அய்யாச்சாமி தெரு) என்னுஞ் சொல்லைத் தமிழில் எப்படி எழுதுவது என்பது குறித்துப் பலவாறு எண்ணியும் சரிப்பட்டு வரவில்லை. கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தார்.

நாம் 'மேஜர்' என்றே எழுதி அனுப்புவோம். ஐயா அவர்கள் மறுமொழி எழுதும் போது அதை எப்படியும் தமிழ்ப்படுத்தித்தான் விடுப்பார்கள். அதன்பின் நாம் அதனைத் தொடர்ந்து கடைப் படிக்கலாம் என்று முடிவு செய்துகொண்டு, அதன்படியே எழுதி விடுத்துவிட்டு மறுமொழியை இருமடங்கு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

அவர்கள் எதிர்பார்த்தது எப்படி வீணாகிவிடும்? அடுத்த சில நாட்கழித்துப் பாவலரேறு அவர்களிடமிருந்து சென்ற மறுமொழி மடலில் 'மேஜர்' விலக்கப்பட்டுப் 'படைமேல்நர்' இடம்பெற்றிருந்தார்.

\- இறை

பாரதிதாசன் விருதுக்கு மீண்டும் அவமானம்!

திருவாரூர் தங்கராசு அவர்களுக்குப் பெரியார் விருதும் பாவலர்கள் வாலி, வயிரமுத்து ஆகியோர்க்குப் பாரதிதாசன் விருதும் அளிக்கப்பட்டிருப்பது குறித்து என்ன கருதுகிறீர்கள்?

- அன்பன், ஈரோடு

பெரியார் விருது வழங்கப்பெறுவதற்குத் திருவாரூர் தங்கராசு பெரிதும் தகுதியானவர் என்பதை மாற்றாரும் மறுக்கவியலாது. ஆனால், பாவேந்தர் விருதுக்குப் பாவலர்கள் வாலியும் வயிரமுத்தும், எந்த வகையில் தகுதியானவர்கள்? பாவேந்தரை நாம் போற்றிப் பாராட்டுவதற்கு அடிப்படையாய் விளங்கும் பகுத்தறிவார்ந்த குமுகாயச் சீர்திருத்த உணர்வோ தூயதமிழ்ப்பற்றோ வாலிக்கும் வயிரமுத்துக்கும் எள்ளளவும் இல்லை என்பது வெளிப்படை. இவ் விருவருக்கும் வழங்கப்படுவதன் மூலம் பாரதிதாசன் விருது மீண்டும் இருமுறை அவமதிக்கப்பட்டிருக்கிறது!

பிறமொழி அறிஞர்கள் கண்டுபிடித்த - உண்டாக்கிய புதுப் பொருள்களுக்குச் சூட்டப்பட்ட பிறமொழிப் பெயர்களை நாமும் அப்படியே வழங்காமல் நம்முடைய மொழியில் - தமிழில் மொழி பெயர்ப்பது அல்லது வேறு பெயர் சூட்டுவது எப்படிச் சரியாகும்?

- கலைவாணன், தீவாமங்கலம்

எந்த ஒரு பெயரும் பொருளற்றதாக இருக்க முடியாது. பொருள்களின் வடிவமைப்பு, வண்ணம், இயக்கம், பயன்பாடு, தோன்றிய இடம், காலம், தோற்றுவித்தவர் முதலான பல்வேறு அடிப்படைகளில் பொருள்பொதிந்தனவாகவே பெயர்கள் இருக்கும் - ஆகவே நாம் நம் மொழியில் புதிய சொல்லாக்கமாகவோ, மொழி பெயர்ப்பாகவோ பெயர்களை அமைத்துக் கொள்வதே சரியானது. வறிய சில மொழிகளுக்கு இது சிக்கலாக இருக்கக் கூடும். ஆனால் வளஞ்சான்ற தமிழுக்கு அந் நிலை இல்லை. ஆகவே தனிச் சிறப்புப் பெயர்கள் தவிர, அனைத்துப் பெயர்களும் பிறவும் தமிழாக்கம் செய்யப்படுதலே வேண்டும்.

தேர் செய்தவனும் அதற்கு அப் பெயரைச் சூட்டியவனுந் தமிழனே. ஆயினும் ஆங்கிலத்தில் அது ‘கார்’ என்றும், சமற்கிருதத்தில் ‘ரதம்’ என்றும், அதுவே திரிந்து இந்தியில் ‘ரத்’ என்றும் கூறப்படுகிறது. நம்மவர் கட்டிய கோயிலை ‘டெம்பிள்’ என்றும், கோபுரத்தை ‘டவர்’ என்றும் ஆங்கிலத்தில் கூறக்கூடாது என்றால் அது அறிவுடைமை யாகாது.

எப்பொருளாயினும் அவற்றைப் பயன்படுத்துவோர் அவற்றுக்குத் தத்தம் மொழியில் பெயர் சூட்டிக் கொள்வதே இயற்கைக்கு இயைந்தது. புகையிலை, வாழைத்தண்டு விளக்கு என்பன போல் இயல்பாகப் பொது மக்கள் சூட்டும் பெயர்களை எவரால் தடைசெய்ய முடியும்?

வாழ்த்துக்கள், வாழ்த்துகள் இரண்டில் எது சரி? பாராட்டுக்கள் என்று எழுதுவது சரியா?

- பி.இர.மாதவன், திருவெறும்பூர்

வாழ்த்து, பாராட்டு என்பவை முதனிலைத் தொழிற் பெயர்கள். 'கள்' என்பது பன்மை குறித்த இறுதி நிலை; தனிச் சொல்லன்று.

இவற்றைச் சேர்த்து எழுதுங்கால் வாழ்த்துகள், பாராட்டுகள் என்று இயல்பாக எழுதாமல், 'வன்றொடர்க் குற்றியலுகரத்தின் முன் வலிமிகுத்து எழுதவேண்டும்' எனக் கொண்டு வாழ்த்துக்கள், பாராட்டுக்கள் என்று சிலர் எழுதுகின்றனர். அவ்வாறு கொண்டால் பாக்குக்கள், தோப்புக்கள் என்று எழுதுவது இயற்கைக்கு மாறாகவும் இன்னோசை யற்றதாகவும் உள்ளது. பேச்சுவழக்கிலும் இல்லை.
ஆகவே வாழ்த்துகள், பாராட்டுகள் என்று இயல்பாக எழுதுவதே நன்று

பயணம் என்பது தமிழ்ச் சொல்லா?

- குப்புசாமி, ஈரோடு

அயனம் என்னும் வடசொல் செல்லுதல் - செலவு என்னும் பொருளது. கதிரவனின் இயக்கம் பற்றிய தென்றிசைச் செலவு, வடதிசைச் செலவு என்பவை சமற்கிருதத்தில் தட்சணாயணம், உத்தராயணம் எனப்படுகின்றமையால் இதனை அறியலாம். அயணம் ப்ர என்னும் முன்னொட்டுப்பெற்று ப்ரயண - பிரயாண - பிரயாணம் என நீண்டுள்ளது. பயணம் என்பது பிரயாணம் என்பதன் திரிபான வடசொல்லே.

'உதய சூரியன்' என்பது வடமொழிச் சொல்தான்; இருந்தாலும் பழகிவிட்டதால் பயன்படுத்துகிறோம். அதைப் போலவே 'சைக்கிள்' என்பதையும் பயன்படுத்தலாம் என்று முதல்வர் கலைஞர் கூறியிருக்கிறாரே...?

- இளங்கோவன், மதுரை

பழகிவிட்டதனாலேயே மாற்றப்பட வேண்டியவற்றைக் கூட மாற்றாமல் விட்டுவிடலாம்; சரி என்று ஏற்றுக் கொள்ளலாம் என்றால் யாரும் எத் திருத்தத்தையுஞ் செய்ய வியலாது; மாற்றத்தையுங் காண முடியாது.

பழகிவிட்டதால் இருசொற்களை மாற்றாமல் விட்டுவிடலாம் என்று கலைஞர் அவர்கள் முதலமைச்சர் நிலையிலிருந்து கூறுவதனால், அதிகாரிகளும் அலுவலர்களும் பிறரும் இயல்பாக மாற்றப்பட வேண்டிய சொற்களையுங்கூட மாற்றாமலே எளிதாகத் தவிர்த்துவிட வாய்ப்பு உண்டு.

ஆசிரியர் - நின்றுகொண்டே சிறுநீர் கழிக்கலாம் என்றால் மாணாக்கன் ஓடிக்கொண்டே ஒன்றுக்கிருப்பான்!

- இறை

பிடிபாடு

மக்கள் வாழ்க்கைக்குப் பற்றுக்கோடு தேவை. நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயலும் ஏதேனும் ஒன்றன் அடிப்படையிலேயே நிகழ்தல் வேண்டும். ஆளுமைப் பணிகளைப் பொறுத்தமட்டில் பற்றுக்கோடு அல்லது அடிப்படை யில்லாதவை எளிதில் புறக்கணிக்கப்பட்டுவிடும்.

ஆளுமைத் துறையில் ஒரு செயலைச் செய்ய அல்லது செய்விக்க அடிப்படை ஆணை அல்லது சான்று தேவைப் படுகின்றது. இதனைக் குறிக்க ஆங்கிலத்தில் `Basis', `Accordance', `Authority' என்னுஞ் சொற்கள் சிறுசிறு வேறுபாட்டுடன் இடம் நோக்கி ஆளப்படுகின்றன. ‘ஆதாரம்’ என்பது இப் பொருள் குறிக்கும் வடசொல். பிறமொழிச் சொற்களின் ஆளுமையால் ஒதுக்கப்பட்ட பழந்தமிழ்ச் சொல் ‘பிடிபாடு’ என்பதாகும்.

‘பிடிபாடு பற்றுக்கோடு’

என்பது திவாகரம்.

தமிழகமெங்கணும் நூற்றுக்கணக்கான இடங்களில் உள்ள கல்வெட்டுகளில் பிடிபாடு ஆட்சிபெற்றுள்ளது.

‘கடைக்கூட்டு இலக்கை மற்றும் கடமையால் வந்த எப்பேற்பட்ட விருத்திகளும் பத்தொன்பதாவது ஐப்பசி மாத முதல் தேவதான இறையிலியாகத் தந்தோம். இப்படி இவ்வோலை பிடிபாடாகக் கொண்டு கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்க’

என வரும் திருக்கோயிலூர் வட்டத்துச் சிற்றூர்க் கல்வெட்டாலும்

‘இப்படிக்கு நம் ஓலை பிடிபாடாகக் கொண்டு சந்திராதித்தவரை செல்வதாகத் தங்களுக்கு வேண்டுமிடங்களில் கல்லிலும் செம்பிலும்...’

என வரும் கோவை-பேரூர்க் கல்வெட்டிலும்,

‘பொற்கால் உள்ள விடமெங்கும் ஆரியரும் உள்ளூரவரும் ஒக்கக் காக்கவும் பண்ணுவதாக வாணாதராயர்க்குச் சொன்னோம். இப்படிக்கு இவ்வோலை பிடிபாடாகக் கொண்டு இப்படிச் செய்து போவதாகவும்’

என வரும் திருவரங்கத்துக் கல்வெட்டாலும்,

‘கானப்பேர் கூற்றத்து... மங்கல நாட்டு முடிக்கரை ஊர்க்கு இசைந்த ஊரோம் இறையிலி ஊரோம் பிடிபாடு பண்ணிக்கொடுத்த பரிசாவது...’

என வரும் சிவகங்கை - காளையார் கோயில் கல்வெட்டாலும் இன்ன பிற நூற்றுக்கணக்கான கல்வெட்டுகளாலும் பிடிபாட்டின் பெருவழக்கை அறியலாம்.

- குழந்தை

நூல் அறிமுகம்

நூல் : சூலூர் வரலாறு

ஆசிரியர் : புலவர். செந்தலை. ந. கவுதமன்

கிடைக்குமிடம் : பாவேந்தர் பேரவை
38, கலங்கல்பாதை
சூலூர். கோவை - 641 402.

விலை. உரு. : 75.00

652 பக்கங்களில் கோவை நகரின் பகுதியான சூலூர் ஊரின் 2300 ஆண்டு வரலாற்றை ஆசிரியர் ஆய்வு நூலாகச் சுவைபட எழுதியுள்ளார். தமிழகத்தின் எந்தப்பகுதியின் ஊர் வரலாறும் பொதுவாகவே இதுதான் என்றாலும் கல்வெட்டு ஆய்வுகளையும், தொல்பொருள் ஆய்வுகளையும் முறைப்படுத்திச் சூலூரின் சிறப்பு வரலாற்றை எழுதியுள்ளார். 2300 ஆண்டுகளுக்கு வரிசைப் படுத்தக் கூடிய அளவில் தொகுக்கமுடிந்தது என்பது சூலூர் வரலாற்றின் பெருமைக்கும் இதன் ஆசிரியர் திறமைக்கும் சான்றாகிறது.

'சூரல்' என்ற கொடி நிரம்பிய 'சூரலூர்' இன்று சூலூராக ஆகிவிட்டது என்ற பெயர் வரலாறு கூறி 1898-இலிருந்து ஆண்டு வாரியாக வரலாறு முறையாகத் தொகுக்கப்பட்டுள்ளது. தன்மான இயக்கத் தொண்டுகளிலும் ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை போராட்டங்களிலும் சூலூர் கொண்ட பங்கு சுவைபட நன்கு தொகுக்கப்பட்டுள்ளது.

- மா. பூங்குன்றன்

பாவலரேறு ஐயா அவர்களின் திருக்குறள் மெய்ப்பொருளுரை

நம் அரும் பெறல் ஐயா பாவலரேறு அவர்கள் தம் வாழ்நாள் பின்பகுதியின் பெருமுயற்சியாய் எடுத்துக் கொண்டு எழுதிய திருக்குறள் - மெய்ப்பொருளுரை - (ஐயா அவர்கள் எழுதி முடித்துள்ள வரையில்) வரும் 10-3-97 அன்று வெளியிடப் பெறுகிற வகையில் அணியமாகிக் கொண்டிருக்கிறது.

ஆயிரம் பக்கங்களுக்கும் மேலான அந்நூல் வெளியீட்டின் பெருமுயற்சிக்கு அன்பர்களின் துணையே பெரிதும் எண்ணப் பெறுகிறது.

- ஆசிரியர், 'தென்மொழி'

கரும்புள்ளி !

- கடுங்கோ

தமிழ் ஆட்சிமொழித் துறைக்கெனத் தனி அமைச்சகங் கண்டு - அமைச்சரை அமர்த்தி, 'எங்குந்தமிழ்; எதிலும் தமிழ்!' என்னுஞ் செம்மாந்த கொள்கையைச் செயற்படுத்த மும்முரமாக முனைந்திருக்கும் தி.மு.கழக அரசு, அண்மையில் சென்னை - வேப்பேரிப் பதின்ம மேனிலை (Matriculation Higher Secondary)ப் பள்ளி யொன்றன் சிக்கல் தொடர்பான நடவடிக்கைகளில் நடந்துகொண்ட முறை தமிழ் ஆர்வலர்களையும் அறிஞர்களையும் வியப்புறச் செய்திருப்பதோடு, அவர்களிடையே கசப்புணர்வையும் ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாட்டில் ஆங்கில வழிக் கல்விச் சிறுவர் பள்ளிகளும் பதினிலை, பதின்ம மேனிலைப் பள்ளிகளும் செய்யும் அட்டூழியங்களுக்கு அளவேயில்லை. பள்ளி வளாகத்துக்குள் தமிழ் பேசக் கூடாது என்பது இப் பள்ளிகளின் கடுமையான கட்டுப்பாடு. தவறிப் பேசினால்கூடத் தண்டனையிலிருந்து தப்ப முடியாது.

சென்னை - வேளச்சேரியிலுள்ள ஒரு பள்ளியில் மாணாக்கனொருவன் வாய்தவறித் தமிழில் பேசிவிட்டால் `I Wont Speak Tamil' என்று எழுதப்பட்ட அட்டையைக் கழுத்தில் மாட்டித் தொங்கவிட்டுக் கொண்டு மண்டியிட்டபடி ஒவ்வொரு வகுப்பறைக்கும் சென்று சிறிது நேரம் நின்று காட்டி வர வேண்டும் என்பது தண்டனை. இப்படியே இன்னும் பல.

தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் அறுபத்தைந்து ஆங்கிலவழிக் கல்விப் பள்ளிகளை நடத்திவரும் 'செவன்து டே அடுவெண்டிசு' என்னும் கல்வி நிறுவனம் சென்னை - வேப்பேரியில் நடத்தி வரும் பள்ளியில் 20.6.96 அன்று மாணாக்கன் ஒருவன் தமிழ் பேசிய காரணத்தால் கடுமையாகத் தண்டிக்கப்பட்டு உடல் நலங் கெட்டு நோய்வாய்ப்பட்டிருக்கின்றான். (அவன் தமிழ் பேசியதாகக் கூறப்படும் நேரத்தில் வகுப்பில் ஆசிரியர் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.)

அம் மாணாக்கனின் பெற்றோர் வழக்கறிஞர் பத்தவச்சலனார் அவர்கள் மூலம் பள்ளியின் பொறுப்பாளர்களுக்கு மடல் விடுத்துள்ளனர்.

தமிழையே இழிவுபடுத்தும் வகையிலும் முறைகேடாகவும் செயற்படும் இப் பள்ளியின் இழிநிலைப் போக்கைக் கண்டித்துத் தலைநகர்த் தமிழ்க் கழக ஒருங்கிணைப்பில் முப்பதுக்கு மேற்பட்ட தமிழ்நல - பொது நல அமைப்புகள் அறவழி ஆர்ப்பாட்டம் நடத்த

முற்பட்ட நிலையில், பள்ளிக்காரர்கள் நால்வகை ஆம்புடைகளை (உபாயங்களை)யும் கையாண்டும் அதனைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

காவல்துறையினர் அப் பள்ளியின் ஏவல் துறையினராகச் செயற்பட்டிருக்கின்றனர். தடையுத்தரவு பிறப்பித்து ஆர்ப்பாட்டத்திற்கு அணியமாகிக் கொண்டிருந்த போதே தமிழ் ஆர்வலர்கள் அனைவரையும் தளைப்படுத்திக் காவல் நிலையத்துக்கும் கொண்டு சென்றுள்ளனர். தலைநகர்த் தமிழ்க் கழகச் செயலாளர் உள்ளிட்ட பலரைப் பிடரியைப் பிடித்துத் தள்ளிச் சென்றிருக்கின்றார் அப் பகுதி உதவி ஆணையாளர். காவலூர்தி ஓட்டுநர்கூட மகளிர் உள்ளிட்ட அனைவரையும் இழிமொழிகளால் கூசாமல் ஏசியுள்ளார். தளை செய்யப்பட்டவர்கள் அனைவரையும் காவல்துறையினர் கண்மூடித்தனமாக நடத்திய இழிநிலைப் போக்கைக் கண்டித்தும் கழுவாய் வேண்டியும் காவல் நிலையத்திலேயே உண்ணாநோன்பு மேற் கொண்டிருக்கின்றனர். ஏறத்தாழ முந்நூறு பேர் தளைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் அவர்களைக் கண்ணிவைத்துப் பிடிக்கும் போக்கில் கலவரஞ் செய்யத் தூண்டும் வகையில் அவர்களைச் சீண்டியிருக்கிறார் அவ் வுதவி ஆணையாளர்.

அறக்கேடாக இவ்வளவும் நடந்திருந்தும் அரசு அப்பள்ளிக்குச் சார்பாகவே பேசிச் செயல்படுவது பெரிதும் வருந்துதற்குரியது.

'தமிழ்பேசிய மாணாக்கன் தண்டிக்கப்பட்டதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தச் சென்ற தமிழுணர்வாளர்கள் தளைப்படுத்தப்பட்டிருக்கிறார்களா?' என்று சட்டமன்றத்தில் வினா எழுப்பபட்டபோது அமைச்சர் 'அந்தக் காரணத்துக்காக யாரும் தளைப்படுத்தப் படவில்லை'. என்று மறுமொழி கூறியிருக்கிறார். அப்படியானால் அவர்கள் என்ன காரணத்துக்காகத் தளைப்படுத்தப்பட்டனர் என்று கூறவேண்டாமா? தளைப்படுத்தப் பட்டவர்கள் செய்த குற்றந்தான் என்ன? தடையுத்தரவை மீறினார்கள் என்றால், அப் பகுதியில் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டிய தேவை என்ன வந்தது?

'அப் பள்ளியில் மாணாக்கன் தமிழ் பேசியதற்காகத் தண்டிக்கப்படவில்லை. ஆங்கிலம் பேசாததற்காகவே தண்டிக்கப்பட்டிருக்கிறான்' என்பது அமைச்சரது மறுமொழியின் இன்னொரு கூற்று. ஆங்கிலம் பேசவில்லையென்றால் அவன் தமிழன்றி வேறு என்ன மொழிதான் பேசினான்? சீனம், சப்பான், செருமனி போன்ற மொழிகளைப் பேசினானா? அல்லது பேசாமலே இருந்தானா? ஆசிரியர் இல்லாத வகுப்பில் பேசாமலிருந்தாலேகூட குற்றமா?

பள்ளியின் சார்பில் தரப்பட்ட மறுப்பையே - விளக்கத்தையே அமைச்சர் மறுமொழியாகக் கூறுவதென்றால், அது எப்படிச் சரியாகும்?

பகற்கொள்ளை யடித்தவன்கூடத் தான் தன்மீது குற்றமில்லை யென்று மறுப்பான். தவறேதும் நடக்கவில்லை என்று விளக்கமளிக்கவும் சிலர் அவனுக்கு உறுதுணையாக இருப்பார்கள். அதற்காக அவனை விட்டுவிட முடியுமா? ஒற்று, ஏன்? உசாவல்தான் எதற்கு? முன்னாளமைச்சர்கள் கூறும் விளக்கங்களை ஏற்றுக்கொண்டு அவர்களை விட்டுவிட வேண்டியது தானே!

மொத்தத்தில் தமிழுக்கு மாறான அறக்கொடிய அவ் வாங்கில வழிக் கல்வி நிறுவனத்தை அரசு பகைத்துக் கொள்ளக் கருதவில்லை. கண்டிக்கக்கூட விரும்பவில்லை. பூசி மெழுகுவதற்கு என்ன காரணம் என்பது நமக்கு வெளிப்படையாகத் தெரியவில்லை! காவல் துறையோ பேருந்தில் யாரோ வெடி வைத்தார்கள் என்று சிக்கலைத் திசை திருப்ப முனைகிறது.

தமிழை இழிவுபடுத்துவதோடு தொண்டுள்ளங் கொண்ட அறிஞர்கள் - ஆர்வலர்களையும் அவமதிக்கும் இத்தகைய போக்கு தி.மு.கழக அரசுக்கு ஒரு கரும்புள்ளியே யாகும்!

பாவலரேறு பெருஞ்சித்திரனார் நினைவு மலர்



- தமிழறிஞர்கள், இனநல வுணர்வாளர்கள், நாட்டு விடுதலைப் போராளிகள் முதலான பலதுறைப் பெருமக்களிடமும் இருக்க வேண்டிய நலமிகு கருத்துக் களஞ்சியம்!
- இளைய தலைமுறையினர் ஒவ்வொருவரும் கட்டாயங் கைக்கொள்ள வேண்டிய அரும்பொருட் பெட்டகம்!

விலை உரு. 60.
பதிவஞ்சலில் பெற உரு. 75

'தென்மொழி நூல் வெளியீட்டு - விற்பனையகம்',
சென்னை - 600 005.

வடமொழி எழுத்துகள்

- க. குழந்தைவேலன்

வடவெழுத்துகளாய ஸ, ஷ, ஜ, ஹ, க்ஷ, போன்றவை தமிழ் மொழியில் தேவையின்றியும், தேவையைக் கற்பித்துக் கொண்டும் விரவி எழுதப்பட்டமையால் இவை தமிழ் எழுத்துகளே என்ற மயக்க உணர்வைக் கற்றாரிடத்தும் ஏற்படுத்திவிட்டது என்பதை மறுக்கவியலாது. அந்த அளவுக்கு அதன் விரவலின் தாக்கம் வேரூன்றிவிட்டது. தமிழ் மொழியிடை வழக்கில் கையாளப்படுவதாலேயே அவை தமிழாகிவிடா. இவை தமிழ் எழுத்துகளிடைப் புகுத்தப்பட்ட (கலந்துவிட்ட அன்று) வடவெழுத்துகளே; தமிழ் எழுத்துகள் அல்லவென்பதை நாம் முதற்கண் உணர்தல் வேண்டும்.

இவ்வெழுத்துகளால் தமிழ் மொழிக்கேற்பட்ட, ஏற்படும் ஆக்க அழிவுகளைப் பார்க்குமுன் இவ்வெழுத்துகளின் உண்மைத் தன்மையைப் பற்றிய தெளிவைப் பெறுவது இன்றியமையாதது. இந்திய எழுத்துகளின் தோற்ற மாற்றங்களைப் பற்றிய ஆய்வு ஓரளவுக்கு நிறைவை எய்திவிட்டது. எனினும் இவ்வெழுத்துகள் (வரி வடிவங்கள்) வடக்கில் தோன்றித் தெற்கில் பரவினவா? தெற்கில் (தமிழ்) தோன்றி வடக்கில் பரவினவா என்ற கருத்து மோதல் இன்னும் நிறைவெய்தவில்லை. இதுகாறும் வரலாற்றை வடக்கிலிருந்து தொடங்கியது போலவே சொலல் வன்மையால் வடக்கில் தோன்றித் தெற்கில் பரவியதாகவே கூறப் பல நூல்கள் எழுந்துள்ளன. உண்மை அவ்வாறன்றித் தெற்கில் (தமிழ்நாடு) தோன்றி வடக்கில் பரவியதற்கான தொல்லியல் மற்றும் மொழியியல் சான்றுகள் மிக்கு வருகின்றன என்பதை மட்டும் ஈண்டுச் சுட்டி நமது கருத்தைத் தொடர்வோம்.

இன்று இந்தியாவில் (தென் கிழக்காசிய நாடுகளிலும்) வழங்கும் அனைத்து மொழிகளின் எழுத்துகளும் (வரிவடிவு) ஒரே மூல எழுத்தில் இருந்து தோன்றிக் கால, இட, மொழி வேறுபாடுகளுக் கேற்பச் சிறு சிறு மாற்றங்களைப் பெற்று வெவ்வேறு வரி வடிவுகளாகப் பல்கின என்பதில் இன்று எவ்வகை ஐயமுமில்லை. இம் மூல வரிவடிவங்கள் தமிழகத்தின்கண் தமிழ் எழுத்துகளுக்காகத் தோற்றுவிக்கப்பட்டு, கிறித்துவுக்குப் பன்னூறாண்டுகட்கு முன் சமயப் பரவலுக்காகவும், வாழ்வு வளந்தேடியும் தென்னகம் போந்த புத்த சமணத் துறவிகளாலும் வேத ஆரியர்களாலும் பிறராலும் கற்கப்பட்டு வடபுலம் போந்த இவ் வரிவடிவ எழுத்துகளை அடிப்படையாகக் கொண்டு பாகதம் முதலான வடமொழிகளின் மிக்கொலிகளுக்கேற்பத் திரித்துச் சில பல மாற்றங்களைச் செய்து தத்தமக்கேற்ற வரிவடிவங்களை வகுத்துக்

கொண்டர். இதனைப் பண்டைய எழுத்துகளில் வரிவடிவங்களை ஆய்வார் நன்கறிவர்.

தமிழ் மொழியின் முப்பது எழுத்துகளுள் ழ், ள், ற், ன் ஆகிய நான்கு மெய்யெழுத்து(ஒலி)கள் நீங்கலாக உள்ள ஏனைப் பதினான்கு மெய்(ஒலி) எழுத்துகளும் பன்னிரண்டு உயிரெழுத்துகளும் வடமொழிக்கண்ணும் இருப்பதால் இவற்றின் (அவற்றின் வழித் தோன்றிய உயிர்மெய் எழுத்துகளும்) வரிவடிவங்களை அப்படியே ஏற்றன. இதனைத் தெள்ளிதின் உணர வாய்ப்பில்லாத பின்னை உரையாசிரியர்களும், அவர்வழி வந்த இலக்கண ஆசிரியர்களும் இவற்றைப் பொது வெழுத்தென்றும் ழ, ள, ற, ன என்பவற்றைத் தமிழின் சிறப்பெழுத்து என்றும் கூறிப் போந்தனர். இவை பொதுவுமல்ல, சிறப்புமல்ல. மெய்மையில் இவை அனைத்தும் ஒலியாலும் வடிவாலும் தமிழின் இயல்பெழுத்துகளே.

வடமொழி(கள்) தமக்கு வேண்டும் மிகை ஒலிகளாக க, ச, ட, த, ப, வில் மேலும் மும்மூன்று வல்லொலிகளுக்கும் ஜ், ஸ், ஷ், என்ற இரைப் பொலிகளுக்கும் ஹ் என்ற மூச்சொலிக்கும் க்ஷ என்ற கூட்டொலிக்கும் மேற்கூறிய அடிப்படை வரிவடிவுகளிலிருந்தே மாற்றங்களைச் செய்து (புது) வரிவடிவங்களைத் தோற்றுவித்துக் கொண்டன. இவ்வெழுத்துகள் யாவும் வடமொழிச் சொற்களில் மட்டுமே வழங்கி வருதலால் வடமொழிச் சிறப்பெழுத்து எனக் கருதினர் பின்னோர். இவையும் ஏனைய எழுத்துகள்(ஒலி) போல அம்மொழியின் இயல்பெழுத்துகளே. இம்மிகை ஒலிகள் ஒன்றேனும் ஈராயிரத்தைநூறு ஆண்டுகளுக்கு மேலாக எந்த ஒரு தமிழ்ச் சொல்லிலும் இடம் பெறாமை ஒன்றே இவை தமிழ் எழுத்துகள் அல்ல என்பதை நாட்டும்.

அது அங்ஙனமாக ஸ, ஷ, ஜ, ஹ, க்ஷ, தமிழில் வந்து கலந்தமைக்கு நெடிய வரலாறுண்டு. வடபுலத்தினின்று காலச் சூழலால் தென்னாட்டில் மிகுதியாகப் பரவிய வடபுலப் பிராமணர்களாலும் அவர்வழிப்பட்ட ஆட்சியாளர்களாலும் சமற்கிருதம் தமிழ் நாட்டில் புகுத்தப்பட்டுத் தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்களில் சமற்கிருதம் தனித்தும் தமிழ்ச் சொற்களிடையே கலந்தும் எழுதப்பட்டது. அச்சொற்களுக்குத் தமிழ் ஒலிகள் போதாமையால் வடமொழி ஒலிகளை இடம் பெறச் செய்தனர். அவ்வொலிகளுக்கான வடநாட்டு வடிவங்கள் தமிழ் நாட்டுச் சூழலுக்கேற்ப வளர்ச்சி பெற்று வடநாட்டு நாகர எழுத்துகளோடு ஒலியில் ஒத்தும் வரிவடிவில் வேறுபட்டும் தமிழ் எழுத்துகளோடு தமிழ்நாட்டுச் சூழலில் வளர்ந்து தமிழ் எழுத்துகளோடு ஒத்த புதுக்கோலங் கொண்டன. இவ்வெழுத்துகள் கிரந்தம் எனப் பெயர் பெற்றன. கிரந்தம் என்றால் சமற்கிருதத்தில் நூல் என்று பெயர். நூல் எழுதப் பயன்பட்ட எழுத்தும் கிரந்தம் என ஆகுபெயராயிற்று. இவ்வெழுத்துகளின் வளர்ச்சி பல்லவ, பிற்காலப் பாண்டியர்கள்

காலத்தில் முழு வளர்ச்சி பெற்றுவிட்டன. இவற்றின் வரிவடிவங்கள் நமது நாட்டில் வளர்ந்தனவேனும் ஒலி வடிவங்கள் நம்முடையவை அல்ல.

மேலும், நாம் கருதுவது போல மேற்கண்ட ஐந்தெழுத்துகள் மட்டுமே தமிழ்நாட்டு வரிவடிவம் பெறவில்லை. வடமொழியின் அனைத்து எழுத்துகளுக்குமே தமிழ்நாட்டில் வரிவடிவம் உண்டு. சுருங்கச் சொன்னால் சமற்கிருத, நாகர எழுத்தின் (இன்றைய இந்தி) அனைத்து ஒலிகளுக்கும் கிரந்தத்தில் (தமிழ்நாட்டு வடமொழி எழுத்து) வரிவடிவம் உண்டு. இவ்வெழுத்துகளின் ஆட்சியைப் பற்றி அறிய வேண்டுமாயின் தமிழ்நாட்டுக் கல்வெட்டுகளையும் அவற்றின் எழுத்து வளர்ச்சிகளையும் காலந்தோறும் குமுகாயக் கண்கொண்டு பார்த்தல் வேண்டும். அதாவது தமிழ்நாட்டு வரலாற்றைச் சரியான கண்கொண்டு பார்க்க வேண்டும். அவ்வாறு ஆய்ந்து பார்க்கின் இவை வடமொழி எழுத்துகளே - வடமொழிக்கே உரிய ஒலிகளே - என்பதும் தமிழ் மொழி எழுத்துகளோடு இவற்றிற்கு மொழி வழியில் எவ்வகைத் தொடர்பும் இல்லை என்பதும், இவை தமிழின் நலன் கருதி இணைக்கப்பட்டன வல்ல; வலிந்து திணிக்கப்பட்டனவே என்பதும் தெளிவாகும்.

இனி, இன்றைய அறிவியல் ஊழிக்கு ஏற்ப நம்மை வளர்த்துக் கொள்ளவும், உலகத் தொடர்புக்கும் இவ்வெழுத்துகளைத் தமிழ் நெடுங்கணக்கோடு சேர்த்துக் கொள்ள வேண்டுமா, வேண்டாவா என்பது நம்முன் எழுப்பப்பட்டுள்ள வினா.

மேற்கண்ட எழுத்துகளைத் தமிழின்கண் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்குக் கூறப்படும் கரணியங்களுள் முகாமையானவற்றைக் காண்போம்.

(1) இவை பண்டைய தமிழ் எழுத்துகள் என்ற காரணத்தைக் கற்பித்துக் கூறுதல்.

(2) தமிழ் மொழியின் வழக்கில் வந்துவிட்டது அதனால் இவற்றைப் பயன்படுத்துவதில் தவறில்லை எனல்.

(3) பிறமொழி இயற்சொற்களை உரிய ஒலியுடன் எழுதிக்காட்ட இயலவில்லை ஆதலின் இவை பயன்பாட்டில் கடைபிடிக்கப்படல் வேண்டும் எனல்.

(4) அறிவியல் சொற்களை எழுதப் பயன்படும் ஆதலின் இவற்றைப் பயன்படுத்தல் வேண்டும் எனல்.

இப்படிப் பலவாறு கூறுகின்றனர். இவை எவ்வகையில் மொழிக்கு ஆக்கம் தந்து மெய்மைப் பயனைத் தருவன என்பது ஆராய்ந்து

பார்க்கத் தக்கது.

'சிறு வழுக்கல் பேரிடர்களின் கருவிதைகள்' என்பார் சிந்தனை செல்வர் சேம்சு ஆலன். இது மாந்த ஒழுக்கத்திற்கு மட்டுமன்று, மொழிக்கும், மொழிவழி இனத்திற்கும் ஏற்புடைய கருத்தாகும். காலத்திற்கேற்ற மாற்றம் வேண்டும். அதுவே வளர்ச்சிக்கு அறிகுறி. ஆனால் தவறான உந்தல்களால் நம்மை மாய்க்கின்ற மாற்றங்களை வளர்ச்சி என்று ஏற்றுவிடக் கூடாது என்பதில் விழிப்போடு இருத்தல் வேண்டும். ஒரு நீண்ட நெடிய மரபில் காக்கப்பட்டு வந்த ஒன்றை, மிக நெருக்கடியான காலக்கட்டங்களில் எல்லாம் ஒதுக்கப்பட்டு வந்த ஒரு கருத்தை மாற்றம், வளர்ச்சி என்ற மயக்கத்தால் ஆராயாமல் நுழைப்பதற்கு வழிவகுத்து அழிவுக்குக் கால்கோள் செய்துவிடக் கூடாது. இயல்வதை இயலாது எனக் கற்பனை செய்துகொண்டு கால்கொண்ட மரத்தில் நவியத்தை நாமே புகுத்திவிடக் கூடாது. (குறிப்பாக இரண்டாயிரத்து நூறு ஆண்டுகளுக்கு மேலாகக் கட்டிக் காத்துவந்த மரபை உடைத்திடக் கூடாது). இதனை மனங்கொண்டு மேற்காணும் கருத்துகளை நோக்குவோம்.

முதலில், இவ்வெழுத்துகளை வட திராவிடமாகிய பாகத மொழியில் (பிராகிருதம்) வழங்குகிறது என்றும், இம்மொழி தமிழர்கள் வடக்கே சென்று பரவிய பொழுது அவர்களால் உருவாக்கப்பட்டது என்றும், அதனால் அவை தமிழ் எழுத்துகளே என்றும் அதனால் இவற்றைத் தமிழ் நெடுங்கணக்கோடு சேர்த்து வழங்குதல் ஏற்புடையதென்றும் கூறுவார் கருத்தை நோக்குவோம்.

பாகதத்திற்கும், தமிழுக்கும் பண்டு தொடர்பு இருந்தது என்பதும் இரண்டிற்கும் பொதுவான சொற்கள் பல வழங்கின என்பதும் மறுக்கவியலா. மேலும் பின் வந்த சமற்கிருதத்தில் வழங்காத எகர, ஒகரக் குறில்கள்கூடப் பாகதத்தில் வழங்கின என்பதும் மெய்யே. எனினும் அஃது ஆரியச் சார்பு (சமற்கிருதம்) மிகுதியடைந்து பெரிதும் வேறுபட்டுவிட்டது என்பதையும் உணர்தல் வேண்டும். 'காலக்கடப்பினால் மட்டுமன்றி இடச் சேய்மையினாலும் மொழிகள் திரிகின்றன... திரிபிற்கு ஓர் எல்லையுமில்லை; ஒரு தனிப்பட்ட வகையுமில்லை. திரிமொழிகள் பல்வேறு வகையில் மேன்மேலுந் திரியத்திரிய, புதுப்புது மொழிகள் தோன்றிக்கொண்டே அல்லது திரிந்து கொண்டே போகும் என்பது ஒருதலை. வேத காலத்திற்கு முந்தியதான அப் ப்ாகதம், வடதிராவிடமாக இருப்பினும் சமற்கிருதச் சார்பால் முற்றுந்திரிந்து தன்வயம் இழந்துவிட்டது. எனவே, அதனை இனியும் தமிழம் (திராவிடம்) எனல் பொருந்தாது.

(தொடரும்)

(நமக்கு வந்த மடல்கள் - தொடர்ச்சி)

அன்பு நிறை தோழமை நெஞ்சீர்!

வணக்கம். தங்கள் மடல் கிடைத்தது. நம் தமிழ் அரிமா - ஐயா - பாவலரேறு தமிழ்க்களம் அமைப்பதில் ஈடுபடுவதைத் 'தமிழ்ப்பேறு' என்றே கருதுகின்றேன். தமிழினத்திற்கு ஒரு விடிவுகாண வேண்டும் - என்று பாடுபட்ட ஐயா அவர்களின் கருத்துகளை மக்களிடம் பரப்புவதை நான் பெருமையாகவே கருதுகின்றேன். இன்னும் விரிவாகத் திட்டமிட்டு மக்களிடம் அவர்தம் கருத்துகளை கொள்கைகளைப் பரப்பிட வேண்டும். அதிலொன்று தான் தமிழ்க்களம் அமைத்து ஐயாவின் தமிழ்ப் பேருருவமாகக் காட்டுதல் ஆகும். அதே போன்று அவர்வழி நின்று கொள்கைகளை உறுதியாகக் கடைபிடிக்க வேண்டும்.

எனவே எம் பகுதியில் பல்வேறு அமைப்புத் தோழர்கள், தமிழ் நெஞ்சங்கள், தமிழாசிரியர்கள், மாணவ மணிகளிடம் ஐயாவின் தமிழ்க் களத்தைப் பற்றிக் கூறிவருகின்றோம். இன்னும் முழுமையான தொகை திரட்டிடவில்லை. தொகை சேர்ந்திட இன்னும் ஒரு திங்கள் ஆகலாம். தொகை முழுமையாகச் சேர்ந்தவுடன் அனுப்பிவைக்கின்றேன். என்னால் ஏற்பட்ட தொல்லைகளைப் பொறுக்க. நன்றி!

சி. வெற்றிவேந்தன் புதுவை

அன்பின் இனிய ஐயா

'தமிழ்க்களம்' கட்டமைப்புக்கான தொகை திரட்ட என்னிடம் பற்றுச் சீட்டுப் பொத்தகம் எண் 38 தரப்பட்டிருந்தது. இன்றுவரை அதன்வழி ஒரு காசு தானும் என்னால் தண்டப் பெறவில்லை. எனக்கிருந்த சூழல்கள், பணியழுத்தங்கள் போன்ற கரணியங்களால் நேற்றுவரை என்னை அதில் ஈடுபடுத்திக் கொள்ளவில்லை. இது தான் உண்மை.

இன்று காலைதான் என்னிடமிருந்த புத்தகத்தைத் தக்க ஒருவரிடம் கொண்டு சேர்த்து வந்தேன். அவர்வழி ஒரு நல்ல தொகை திரளும் என்று நினைக்கிறேன். அடுத்து இன்னும் ஒரு புத்தகம் வேண்டும். அதனை வேறொரு நண்பர் என்னிடம் கேட்டுள்ளார்.

இங்கு அலுவல் அழுத்தம் அதிகம். வரமுடியவில்லை. முடிந்தால் அஞ்சல்வழி அனுப்புக. பெற்று அதனை அவரிடம் சேர்ப்பித்து வைப்பேன்.

என்னால் முடிந்ததை என் பங்கைக் குறையின்றிச் செய்வேன். அது என் கடமை. பிறபின். நன்றி. வணக்கம்.

இளஞ்சித்திரன், சென்னை - **48.**

பெருந்தகையீர், வணக்கம்!

தங்கள் மடல் பெற்றேன். பாவலரேறு தமிழ்க்களம் அமைக்கும் வரைபடமும் அதன் நோக்கத்தையும் நாங்கள் யாவரும் அறிந்தோம். தன்னார்வங் கொண்ட ஒவ்வொரு தமிழ் மறவனும் மறத்தியும் தமிழ்க்களம் அமையத் தன்னால் இயன்ற பணியை - செயற்கரிய பணியைச் செய்ய வேண்டுமென்பதே எங்களின் நோக்கமும் எண்ணமுமாகும்.

ஆரியப் பார்ப்பனியச் செயல்களுக்கு அடிமையிலும் அடிமையாகிக் குருட்டுப் பன்றிகள் போல் திரிந்து அலைந்துக் கொண்டிருக்கும் தந்நிலையறியாத் தமிழ் மக்களிடம் 'பாவலரேறு யார்? அவர் கொள்கை என்ன? தாகம் என்ன? நோக்கம் என்ன?' என்று விலாவாரியாக எடுத்துரைப்பது எங்களுடைய தலையாய கடமைகளில் ஒன்றாகும்.

பாவாணர், பாவேந்தர், பாவலரேறு படைப்புகளில் யாவற்றையும் ஒருவனோ, ஒருத்தியோ கசடறக் கல்லாமல் திடீர் என்று தமிழ் உணர்வோ, தனி நாடு வேண்டும் என்ற வேட்கையோ வந்து விடாது. இம் மூவரின் படைப்புகளை முறையே கற்றவர்களுக்குத்தான் தம் உயிர் பிரியும்வரை அந்த விடுதலையுணர்வு இருந்துகொண்டேயிருக்கும். நாங்கள் கடல் கடந்த நிலையில் இருந்தாலும் எங்கள் குருதியில் கலந்துவிட்ட ஒன்றாகும். இதுபோல் தமிழகத் தமிழர்கள் யாவரும் ஒன்றிணைந்து செயல்புரிந்தால் பாவலரேறு கனவும் நனவாகும் என்பதில் சிறிதும் ஐயமில்லை!

- க. மாணிக்கம், மலேசியா

பேரன்புடையீர், வணக்கம்.

'பாவலரேறு தமிழ்க்களம்' தொடர்பான மடல் கிடைக்கப்பெற்றேன்.

எதிர்பார்த்த அளவு பொருள் திரட்டும் முயற்சியில் தொய்வு அடைந்திருப்பதை நாம் அனைவரும் உணருகின்றோம். நம் ஐயாவின் வெற்றிடத்தை - தமிழினத்தின் மீட்சிக்கு அவருடைய படைப்பாக்கங்கள் எவ்வளவு இன்றியமையாதவை என்பதை நம்மில் ஒரு சிலர்தான் உணர்கின்றோம். அவரோடு முன்பு தொடர்புடையோர் பலர் ஐயாவின் இடைவிடாத உழைப்பை - முயற்சியை மறந்தே விடும் சூழல் உருவாகி விடுமோ என்று எண்ணவேண்டியுள்ளது.

பல்வேறு முரண்பாட்டுக்குள் சிக்கிச் சீரழியும் தமிழக மக்கள், நம் பாவலரேறு அவர்களின் தமிழ்த் தேசிய இனச் சார்பு உணர்வுக்கு வந்தாலொழிய, நாம் அடுத்த கட்டத்திற்கு நகரமுடியாது. பார்ப்பனிய மீட்சியின் ஒரு வடிவமாகத் தெளிவான குறிக்கோள் இல்லாத சாதிய அமைப்புகளின் தோற்றமும், அவற்றின் அரசியல் பங்கேற்பும், தொடர்ந்த

குழப்ப நிலைக்கும் குமுகாயத் தேக்க நிலைக்குமே இட்டுச் செல்லும். அதற்கு ஏற்றாற்போல்தான் மாவட்டப் பிரிப்புகளும் சாதியப் பெயர் சூட்டலும் அமைந்துள்ளன.

தமிழர்களின் மெய்யியல் கொள்கைகளின் தொடர்ச்சியாக ஐயா அவர்களிடமிருந்து மிகச் சிறந்த வெளிப்பாடுகள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. அக் கருத்துகள் தமிழினத்திற்கு மட்டுமின்றி இவ்வுலக மக்களுக்கே மிகத் தேவையானவையாகும். அவற்றை நாம் எப்பாடு பட்டேனும் வகைப்படுத்தி வெளியிட வேண்டும்.

'பாவலரேறு தமிழ்க்களம்' அமைப்புக் குழுவின் முதல் கூட்டத்தில் முடிவெடுத்தபடி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு குழுவாகச் சென்றுதான் நாம் பொருள் தண்டுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதற்காக மாவட்ட வாரியாக முகவரிகளைத் தொகுத்துக் கொண்டும், புதிய உணர்வாளர்களை இணைத்துக் கொண்டும் நாம் செயல்பட வேண்டும்.

தலைமையகத்திலிருந்தே இதற்கான முடிவு செய்து மாவட்ட வாரியாக எந்தெந்தப் பக்கல் (தேதி) என்பதை அறிவிக்குமாறு வேண்டுகிறேன். குழுவில் அம்மா தாமரை பெருஞ்சித்திரனார் - புலவர் இறைக்குருவனார், திரு. பூங்குன்றன், திரு. அருளியார், திரு. பொழிலன் மற்றும் ஐயாவோடு நெருங்கிய தொடர்புள்ள அறிஞர்களும் பங்கேற்கலாம். எல்லாவற்றையும் முடிவு செய்து மாவட்ட வாரியாக நாளை அறிவிக்குமாறு வேண்டுகிறன்.

க. கண்ணன், கரடிப்பட்டி

பாவலரேறு பெருஞ்சித்திரனாருக்கு நினைவுச் சின்னம் எழுப்புவீர் !

'தமிழ் வளர்ச்சியைப் பொறுத்த அளவிலே பாவாணர் நூல்களை நாட்டுடைமையாக்கி இருப்பதை வரவேற்கின்ற அதே நேரத்திலே, அவருடைய மிகச் சிறந்த வழித் தோன்றலாக இருக்கின்ற பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஐயா அவர்கள், தமிழர் மொழியாலும், நாட்டாலும், தனிச் சிறப்பு பெற்று விளங்க வேண்டும் என்று உழைத்தவர். அவருக்கும் இந்த அரசாவது ஒரு நினைவுச் சின்னம் எழுப்புவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்'.

- பேராசிரியர் தீரன் ச.ம.2.

சட்டமன்ற உரை, 25-7-96

செய்திகள்

பாவேந்தர் தமிழ்ப் பேரவை - கொரட்டூர்.

சென்னை - கொரட்டூர் பாவேந்தர் தமிழ்ப் பேரவையின் சார்பில் பாவலரேறு ஐயா அவர்களின் முதலாண்டு நினைவு நிகழ்ச்சி கடந்த மடங்கல் 8 காரி (24.8.96) இரவு 7 மணிக்குக் கொரட்டூர்த் தொடர் வண்டி நிலையச் சாலையில் திரு. இல. மார்க்கசு தலைமையில் நடைபெற்றது. திரு செந்தமிழ்ப்பாணன் வரவேற்றுப் பேசினார்.

திருக்குறள் மணி இறைக்குருவனார், திரு. மதிவாணன், பேரா. இராமு, திருவாளர்கள் இரா. அருள், தேவேந்திர குமார், உலோகநாதன், இல. குமார், ஆலந்தூர் செல்வராசு, வேலரவு, ஐயப்பன், தையற் கலைஞர் சின்னப்பன் ஆகியோர் உரையாற்றினர். திரு. ச. திருக்குமரன் நன்றி நவின்றார்.

திருப்பூரில் பாவலரேறு நினைவேந்தற் பொதுக்கூட்டம்

திருப்பூர்ப் பட்டுக்கோட்டையார் நகர்த் தென்னம்பாளையம் குடியிருப்பில் கடந்த மடங்கல் 2 அன்று (18.8.96) மாலை 6 மணிக்கு, தமிழ்நாடு மார்க்சிய இலெனினியக் கட்சி, புரட்சிகர இளைஞர் முன்னணிக் கிளைகளின் சார்பில் திரு. பா.செ. நல்லதம்பி தலைமையில் பாவலரேறு நினைவேந்தல் பொதுக்கூட்டம் நடைபெற்றது. திரு. க.வே. கதிரவன் வரவேற்றுப் பேசினார். திருவாளர்கள் புலவர் தமிழ்மாறன். கி.வே.பொன்னையன், அ.வள்ளுவராசன், தி.பொ.குமார், அ.தமிழமுதன், அரசமைந்தன், கருநிலவன், தங்கராசு, தமிழப்பன் ஆகியோர் உரையாற்றினர். திரு. ம.சுப்பிரமணி நன்றி நவின்றார்.

விடுதலைப் புலிகளின் மீதான தடையை நீக்கக் கோரியும், துயருறும் ஈழமக்களுக்கு மருந்தும் உணவும் வழங்கக் கோரியும், தமிழர்க்கெதிரான இந்திய - இலங்கை அரசுகளைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

த.ஒ.வி.இ. இரண்டாவது பொது மாநாடு (வள்ளியூர்)

தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கத்தின் இரண்டாவது பொது மாநாடு கடந்த மடங்கல் 22, 23 (செபு. 7, 8) ஆகிய நாட்களில் நெல்லை மாவட்டம் வள்ளியூரில் இயக்க ஒருங்கிணைப்பாளர்

மிழரசன் தலைமையில் நடைபெற்றது.

திரு. உஞ்சைராசன் கொடியேற்றினார். ஈகி பி.எசு. மணி, கேரளத்தை சேர்ந்த திருவள்ளுவர் ஞானபீடம் சிவானந்தர், திருவாட்டி இறை. பொற்கொடி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பாட்டரங்கத்தில் பாவலர்கள் நொண்டிக் கருப்பன், நிறைமதி, அசுரன், குணத் தொகையன் ஆகியோர் பங்கேற்றனர். திரு. சிவா தலைமையில நடைபெற்ற இளைஞர் - மாணவர் அரங்கில் திரு. செல்வா, செல்வி கயல், திருவாட்டி வெண்மணி, திரு. ஆரோ. செந்தமிழன், துரைப் பாண்டியன் முதலானோர் உரையாற்றினர்.

புலவர் இறைக்குருவனார், திரு. குமரி மைந்தன், திரு. க. கண்ணன் ஆகியோர் திரு. பொழிலன் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கிலும், திரு. இரா. திருமாவளவன், திரு. சண்முக சுந்தரம், திரு. சிவ ராசேந்திரன் ஆகியோர் திரு. இளங்கோவன் தலைமையில் நடைபெற்ற பொது அரங்கிலும் உரையாற்றினர். திரு. மகிழ்வரசன் நன்றி நவின்றார்.

குறளேந்தி - சிவகாமி - வாழ்க !

தி.பி. 2027 சூடலை 13 (27-6-96) வியாழக் கிழமை காலை 9 மணியளவின் கோனாபட்டு கு.மெ. இல்லத்தில் தொடக்கக் காலம் முதல் தென்மொழி அன்பரும் புரவலருமான நெய்வேலி - சுப. திருமாறன் - நா. ஆண்டாள் இணையரின் அருமை மகன் திருநிறை செல்வன் குறளேந்திக்கும் (முதுநிலைப் பொறியியலாளர்), கோனாப்பட்டு, திரு. அழ.மு.அழ. முத்துராமன் - வள்ளியம்மை இணையரின் அன்பு மகள் திருநிறை செல்வி. சிவகாமிக்கும் திருமணம் சிறப்புற நடைபெற்றது. மணமக்கள் நீடு வாழத் தென்மொழி வாழ்த்துகிறது.

ஆ. இராசேந்திரன் - கார்த்தியாயினி வாழ்க !

தி.பி. 2027 மடங்கல் 17 (2-9-96) திங்கள் கிழமை காலை 5.15 மணிக்கு ஈரோடு வடிவு சுப்பிரமணியம் திருமண மண்டபத்தில் - நெடுநாள் தென்மொழி அன்பராய் இருந்து அண்மையில் மறைவுற்ற பல்லடம் ஆறுமுகம் அவர்களின் அன்பு மகன் செல்வன். ஆ.இராசேந்திரனுக்கும், திரு. நா. சண்முகம் அவர்களின் அன்பு மகள் செல்வி கார்த்தியாயினிக்கும் திருமணம் சிறப்புற இனிதே நடைபெற்றது. மணமக்களைத் தென்மொழி உளமார வாழ்த்துகிறது.

மிகவும் எளிது
வேலை கிடைப்பது

15-1-1997ல் வெளிவர இருக்கும்
இந்த அருமையான புத்தகத்தை
பா. இராமமூர்த்தி எழுதியிருக்கிறார்.

சொல்லும் செய்தி

உங்களைச் சுற்றிலும் உலகம் முழுதும்
கொட்டிக் கிடக்கும் வகை வகையான
வேலை வாய்ப்புகளை எட்டிப்பிடித்து
வாழ்வில் ஏற்றம் பெறுவது எப்படி என்று!

விளைவு

இந்த நூலைப் படித்துச் செயல்பட்டால்
நீங்கள் வேலை இன்றி இருக்க வாய்ப்பே இல்லை,
இது நீங்களே பார்க்கப் போகும் வியப்பான உண்மை!

முன்பதிவு

உரு 100 விலையுள்ள இந்நூல் முன்வெளியீட்டுப்
பதிவுச் சலுகையாக உரு 60-க்குக் கிடைக்கும்.
பணவிடை (எம்.ஒ.) - வரைவோலை (டி.டி.)
அனுப்பக் கடைசி நாள் 15-11-96

திலகம் வெளியீடுகள்
5, வெங்கடேச சௌதரி தெரு
மேற்குத் தாம்பரம், சென்னை - 600 045.
தொலைபேசி - 236 9436

நமக்கு வந்த மடல்கள்.

அன்பு மனத்தீர்,

வணக்கம். தென்மொழியின் (சுவடி 28 ஓலை 8) தி.பி. 202எ, மடங்கல் (1996 - ஆகத் இதழில் பின் அட்டையின் உள் பக்கத்தில் ஈரோடை திரு நிலவன் (பூபதி) அவர்களின் மடல் வெளியிடப் பட்டிருந்தது!

ஈரோடு, ஆசிரியர் குடியிருப்பு ஊ.ஒ.தொடக்கப் பள்ளியில் 28.7.96 (கடகம் 13) ஞாயிறு மாலை நடந்த பாவரசு முடியரசனார் முத்தமிழ் மன்ற இலக்கிய விழாவும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் முதலாமாண்டு நினைவு விழாவும் (உ.த.மு.க. சார்பில்) புலவர் இரா. வடிவேலனார் தலைமையில் நடைபெற்றன. விழாக்கள் சிறப்பாக, அழகுற அமைத்துப் பிறர் பாராட்டும்படி நடத்தப்பட்டன.

திரு. நிலவன் அவர்கள், 'ஏறத்தாழ பு.இ.மு நிகழ்ச்சியாகவே நடைபெற்றது' என்று கூறியுள்ளார். இவ் விழாக்கள் மேற்கண்ட இரு அமைப்புகளால் நடத்தப்பட்டாலும் பல்வேறு அமைப்புகளில் பங்கு பற்றியுள்ள (பு.இ.மு, தமிழ் தமிழர் இயக்கம், திருக்குறள் பேரவை, பாவேந்தர் பாரதிதாசன் இலக்கியப் பேரவை, தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சி, பகுத்தறிவாளர் கழகம், திராவிடர் கழகம் (இரா) தமிழ்நாடு மார்க்சிய இலெனினியக் கட்சி, தாழ்த்தப்பட்டோர் விடுதலை இயக்கம், பா.ம.க., ம.தி.மு.க., தமிழ்த் தேசியக் கட்சி போன்றவை) தோழர்கள் நிறையப் பேர் (250 பேர்களுக்கு மேல்) மட்டுமல்லாது பொது மக்களும் கலந்து சிறப்பித்தார்கள். இவர்களில் புஇமு தோழர்கள் வாழ்த்தும் உரையுமாக மூவர் பேசினர். இவர்களில் திரு. வே.தமிழ்மாறன் பாவலரேறுவின் பெருமைகளையும், நேரடியாகக் கடந்த இருபத்தைந்தாண்டுகளாகத் தொடர்பு கொண்டு இருந்த பழக்கத்தையும் சுட்டிக் காட்டிப் பேசினார். கால் வீக்கம் இருந்தபோது மருத்துவரை அணுக வேண்டியதையும் குறிப்பிட்டார். சாதியைச் சுட்டிக் காட்டி இந்தச் குமுகம் தாழ்த்திப் பேசியதையும் சொன்னார். சாதிகளால் பிரிந்திருக்கும் தமிழன் இழிநிலையை எடுத்துக் காட்டினார். இவை குறை என்று கூறுவதற் கில்லை.

ஐயா அவர்களின் விடுதலை உணர்வும், முப்பதாண்டுகளின் அவர்தம் உழைப்பும் எப்படிப்பட்டன என்பதைத் தாம் எழுதிய நினைவு மலர்க் கட்டுரையில் ('மூவாயிரம் ஆண்டுகளில் ஒரு முப்பதாண்டுப் பங்காளி') எடுத்துக் காட்டியுள்ளதாகக் கூறினார்.

திரு. தமிழ்மாறன் பாவலரேறுவைக் கொச்சைப் படுத்தவோ, அழிக்க நினைக்கவோ எள்ளளவும் நினையாதவர் என்பதைத் தோழர் திரு. நிலவன் உணர வேண்டும்.

உள்ளுக்குள் குறைகூறிக் கொண்டிருப்பதை விட ஒன்றுபட்டுச் செயலாற்றுவதே இன்றைய தேவை. செயல்படுவோம்.

- இரா. வடிவேலன், ஈரோடை

மதிப்பிற்குரியீர்,

மடங்கல் திங்கள் தென்மொழி இதழில் ஈரோடு திரு. நிலவன் (பூபதி) அவர்கள் ஈரோட்டில் நடைபெற்ற பாவலரேறு ஐயா அவர்களின் நினைவு நாள் பற்றிய செய்தியில் தவறான செய்தியைத் தந்துள்ளார்கள்.

திரு. தமிழ்மாறன் அவர்கள், ஐயா அவர்களைப் பற்றித் திறனாய்வு அடிப்படையில் ஐயா அவர்களின் உலகப் பார்வை எனும் பொருள் பற்றி உரையாற்றினார்கள். அதில் ஐயா அவர்களைத் திட்டினார் என்று குறிப்பிடுவது எவ்வகையிலும் சரியில்லை.

மேலும் பு.இ.மு அமைப்பினர் ஐயா அவர்களின் முப்பதாண்டு காலத் தமிழ்நாட்டு விடுதலைக்கான உழைப்பையும், உணர்வையும் கொச்சைபடுத்த நினைக்கிறார்கள், அல்லது அழிக்க நினைக்கிறார்கள் என் குறிப்பிடுவது ஐயா அவர்களே தமிழ்நாடு மார்க்சிய இலெனினியக் கட்சியைப் பற்றிக் குறிப்பிட்ட செய்தியை ஐயா அவர்களின் மலரில் தலைநகர் தமிழ்ச் சங்கம் சுந்தரராசன் அவர்கள் குறிப்பிட்டதிலிருந்து த.நா.மா. - இலெ.க. ஐயா அவர்கள் மீது கொண்டிருந்த பற்றும் ஐயா அவர்கள் த.நா.மா - இலெ.க. மீது கொண்டிருந்த நம்பிக்கையையும் புலப்படுத்தும். இப்படிப்பட்ட வரலாற்று உண்மைகளை மறைத்து எமது அமைப்பைச் சிறுமைப்படுத்தி வெளியிட்டுள்ள கருத்துகளை உறுதிப்பட மறுக்கிறோம்.

த.நா.மா. - இலெ.க.யின் கட்சித்திட்டத்தை ஐயா அவர்கள் வரவேற்றுத் தமிழ்நிலத்தில் வெளியிட்டிருந்த செய்திகளை அறிந்திருந்தும் தென்மொழி, திரு நிலவன் அவர்களின் மடலைத் தன்னாய்வின்றி வெளியிட்டுள்ளமை கண்டு மிகுதியும் வருந்துகிறோம்.

எமது இம்மறுப்புரையை வெளியிட வேண்டுகிறோம்.

- பொன்னையன் (த.நா.மா.இ.லெ.க.) சென்னிமலை.

(தொடர்ச்சி உள்பக்கம்)